வேலாயுத சதகம்
திருப்புகழ்

D—, ILAM,M
N00

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 28 SEP 1900 MADRAS

உ

குகசகாயம்.

அழகுமுத்துப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

ஸ்ரீ மெய்கண்ட

வேலாயுத சதகம்.

திறப்புகழ்.

இவை

நாகை "நீலலோசனிப்" பத்திராதிபரும்,

ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய

ஸ்ரீ. சதாசிவம்பிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

நாகை ஸ்ரீ மெய்கண்ட குமரகோவில் தர்மகர்த்தா

ஸ்ரீ பா. கா. காத்தப்பெருமாள் பிள்ளை

அவர்களின் பொருளுதவிகொண்டு

நாகை "நீலலோசனி" மானேஜர்

T. B. ரெங்கசாமிப் பிள்ளையால்

தஞ்சை:

"பூரணச்சந்திரோதய" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

முதற்பதிப்பு காப்பி ௧000.

இதன்விலை அணா ௪.] [தபால் சார்ஜ் பை. ௬.

சார்வரி-௵ ஆவணி௴

Copy Right Registered.

O-, ILAM,M
700

உ

துகசகாயம்.

முகவுரை.

17392

அருணையம்பதியி லவதரித்த ஸ்ரீ அருணகிரிநாதரருளிச்செய்த திருப்புகழ்த்தோத்திரங்கள் குமாரக்கடவுளுக்கு எவ்வளவு இனிய தோத்திரங்களாயிருக்கின்றனவோ, அவ்வாறே இவ்வழகுமுத்துப்புலவர் சொல்லிய இந்தத் திறப்புகழ் முதலிய நூல்களிலுள்ள தோத்திரங்களும் அக்கடவுளுக்கு இனியனவாயிருக்குமென்பது அவற்றைப் படிக்கும் நல்லோர் பலருக்கும் இனிது விளங்கும். புலவருடைய திருப்பாடல்கள் அதிமதுரமும் அற்புதமுமாயிருப்பதோடு பொருளமைதியிலும் மிகச்சிறந்தனவாயிருக்கின்றன. புலவர்பெருமான் பாடியிருந்த பிரபந்தங்களில் முதலில் நாம் நீண்ட காலமாய்க் கேள்வியுற்றது திறப்புகழொன்றுமே. இந்நகரிலுள்ள முதியோ ரிரண்டொருவர் ஷை திறப்புகழில் இரண்டொரு பாடல்களை அரைகுறையாய்ச் சொல்லக் கேட்கவே, மதுரம்பழுத்துத் தேன் துளிக்கும் வளப்பமுடைய செய்பாகமாயிருக்கும் அப்பாடல்கள் அதை யச்சியற்றி வெளிப்படுத்தும் அவாவை நமக்குத் தூண்டின. அதன்மேல் அதன் பனையேட்டுச் சுவடிகளைத் தேடியதில் இந்நகர் முத்திமண்டபத் தேவாரத் திருக்கூட்டத்து ஸ்ரீமத் சுவாமிநாத பண்டாரத்தையா அவர்கள் தமது தங்கையார் சேகரித்து வைத்திருந்த அநேகம் விசேஷ ஏட்டுப் பிரதிகளிலொன்றாயிருந்த இதைத் தேடி யெடுத்துக்கொடுத்து அதன் மகிமையையும் சொன்னார்கள். பிறகு இவ்வூர்க் கன்னாரத் தெருவிலுள்ள கருத்தாபத்தரென்பவரிடத்தும், கட்டியப்பர் கோயில் தெற்கு மடவிளாகம் நாராயணபிள்ளையிடத்தும் இந்தச்சுவடிகளிருப்பது தெரிந்து அவர்களைக் கேட்க, அவ்விருவரும் மனமுவந்து தங்கள் தங்கள் பிரதிகளை யளித்

தார்கள். அன்றியும், சமீபகாலத்தில் காலங்கடந்த குமரகுரு வுபாத்தியாயரும் ஓர் பிரதியைத் தேடித்தந்ததோடு இந்நான்கு பிரதிகளையும் ஒப்புநோக்கி எழுதவும் நமக்கு உதவியாயிருந்தார். நமக்குக்கிடைத்த நான்கு பிரதிகளும் ஒன்றற்கொன்று வேறுபாடுடையனவாகவேயிருந்தன. ஆயினும், ஸ்ரீ சுவாமிநாதபண்டாரத்தையா அவர்களளித்த பிரதியே பேருபகாரமாயிருந்தது. திறப்புகழின் எழுத்துப்பிழைகளை நமக்குத்தெரிந்தவரையில் ஒருவாறு திருத்தி அச்சியற்ற முயலுங்கால் அப்புலவர்திலகம்முதன்முதல் வாய்மலர்ந்தஸ்ரீ மெய்கண்டவேலாயுதசதகமொன்றிருப்பது தெரிந்து தேடுகையில், அதில் ஓர் பனையேட்டுச்சுவடி இவ்வூர் ஸ்ரீமாணிக்கதேசிகரிடமிருந்து கிடைத்தது. அதையும் சேர்த்துத்தான் அச்சிடவேண்டுமென்று அன்பர்கள் பலருஞ்சொன்னபடியெழுதி முடித்து இவ்விரண்டையும் ஒன்றாய் அச்சியற்றலானோம். இன்னும் இப்புலவர் திருவாக்காயுள்ளன ஸ்ரீ மெய்கண்டவேலாயுதாவுலா, ஸ்ரீ காயாரோகணர் குறவஞ்சி யென்பனவாம். இப்புலவர் பெருமானுடைய திவ்வியம்பழுத்த செவ்விய பாடல்கள் சிலவற்றிலடங்கியிருக்கும் விசேஷார்த்தங்கள் தெளிந்தோர்க்கேயன்றி யெம்போன்ற சாமான்னியர்களுக்குப் புலப்படுவது கஷ்டமாகும் அற்புதத் தெய்வவாக்காயிருத்தல்பற்றி அவற்றிலுள்ளதை உள்ளபடி அச்சியற்றப்பெற்றதே தவிர ஒன்றைத் திருத்தவும், கூட்டவும், குறைக்கவும், புதுக்கவும் புகுந்தோமில்லையென்பது உண்மையாம். நூதனப்பிரதிஷ்டையிலும், புராதனப் பிரதிஷ்டையாயுள்ளதை ஜீரணமாகாமல் காப்பாற்றுவது பெரும்புண்ணியமாமென்பதைநினைத்துக் காலக்கிரமத்தில்செல்லின் வாயிற்செல்லாது ஓலைப்பிரதியிலிருந்ததைக் காகிதப்பிரதியி லச்சுவிமானத்தேற்றிப் பவனிபோதரச் செய்தோமேயன்றி மற்றில்லையென்க. எழுதினவர்

கள் எட்டையும் படித்தவர்கள் பாட்டையுங் கெடு
த்திருப்பதியல்பாதலால் இதைக்கண்ணுறுந்திருவரு
ட்செல்வர்கள் அங்ஙனமேதாவதிருப்பதைத் திருத்
தித் தெரிவிக்கில் அதைச் சிரசாகவகித்து அடுத்த
பதிப்பில் திருத்தமுறப் பதிப்பிப்போமென்க. "கற்க
கசடறக் கற்பவைகற்றபி னிற்கவதற்குத்தக" வென்
னும்பொய்யாமொழியாரின் தெய்வவாக்குக்கிலக்கிய
மாய்க் கசடறக்கற்று அதன் வழியிலெட்டுணையுந்தவ
றுதொழுகுபவரும்இவ்வூர்ப் பிரபுகுலதிலகருமாகிய
ஸ்ரீமத் சோ. வீரப்பசெட்டியார் அவர்களின் திருவா
க்கைஒருவாது இதை அச்சியற்றப் பொருளுதவிபுரி
ந்தஷை குமரகோவில் என வழங்கும்ஸ்ரீமெய்கண்ட
வேலாயுதராலய தர்மகர்த்தா மகா-௱-௱-ஸ்ரீ காத்தப்
பெருமாள் பிள்ளையவர்களின் பொருளுபகாரம் பாராட்
டத்தக்கது. அன்றியும் ஷை உதவிக்கு உதவியாயி
ருந்த இவ்வூர் ஷாப்பு மகா-௱-ஸ்ரீ முனிசாமிபிள்ளை
யவர்களின் முயற்சிக்கும் நன்றி பாராட்டுகிறோம்.
இவர்களெல்லாருக்கும் ஷை நூல்களின் விசேடங்
களை யெடுத்துக்காட்டி யவற்றிலபிமானம் வருவி
த்து நம்மையுஞ் சோம்பியிருக்கவொட்டாது அடிக்
கடி தூண்டுதல்செய்து இந்நற்கருமத்தை முடிப்பி
த்த ஸ்ரீபுண்டரீக தீர்த்தத்தின் மேல்கரையிலிருக்கும்
ஜெனனமரண ரிஜிஸ்டரார் ஆபீஸ் மகா-௱-ஸ்ரீ பொ
ன்னம்பலப்பிள்ளையவர்களின் விடாமுயற்சியையும்,
பக்தி சிரத்தையையும்பற்றி யாம் பெரிதுமகிழ்ச்சிய
டைகின்றோம. மேற்குறித்த இந்தநல்லோரனைவரும்
இதுபோன்றசற்கருமங்களை மனமொழிமெய்களாற்
றினந்தோறுஞ் செய்துகொண்டு சுகஜீவியாய் வாழ்
ந்திருக்கத் திருவருள் புரியுமாறு கலியுகவரதராகிய
ஸ்ரீமெய்கண்டவேலாயுதக் கடவுளின் திவ்விய திரு
வடிகளை மனமொழி மெய்களாற்றினந்தோறும் வழு
த்துகின்றோம்.

உ

குகசகாயம்.

அழகுமுத்துப்புலவர்

சரித்திரச் சுருக்கம்.

கலியுகவரதராகிய ஸ்ரீ குமாரக்கடவுள் மேல் இந்த மெய்கண்ட வேலாயுதசதகம், திருப்புகழ்முதலிய திவ்யதோத்திரப்பாமாலைகளை அழகுபெறவணிந்தவிம் மகானுபாவரின் திருநாமம் அழகுமுத்துப்புலவரென்று நிச்சயமாகத் தெரியவருகிறது. அவருடையமற்றைய சரிதங்களொன்றும் நூலாதாரமாகத் தெரியவில்லை யானாலும், கர்ணபரம்பரையாகக் கேள்வியுற்றிருந்ததை யிப்பொழு தீண்டுள்ள முதியோர் பலர் வாயால் தெரிந்து ஒருவாறு சுருக்கி யெழுதுகிறோம்.

இவருடைய ஜனனபூமி தெய்வத்திருக்காவிரி மகாநதி சூழ்ந்த சோழவள நாட்டிலே மிக்கவளம் பெற்றதும், அளவற்ற மகாமகிமைகளை யுடையதுமாகிய சிவராஜதானி க்ஷேத்திர மெனப்படும் இந்த நாகையம்பதி ஸ்ரீ நீலாயதாக்ஷியம்மன் வடக்கு வீதி யென்றும், சேனைக்குடையார் மரபிற்ஜனித்தவரென்றும், அவருடைய காலம் சற்றேறக்குறைய நூற்றைம்பது வருடங்களிருக்கலாமென்றுந் தெளிவாய்த்தெரியவருகிறது. இந்த அழகுமுத்துப்புலவரும் காளிதாசப்புலவர், காளமேகப்புலவர் முதலியவர்களைப்போலவேஇளமையிற்கல்விகல்லாதவராயிருந்ததோடு பொருட்சம்பாத்திய மற்றவராகவும், சரீரத்தில் பூர்வகர்மரோகம் ஏதோவொன்றுடையவராகவுமிருந்ததால், யாவரும்வெறுக்கத்தக்க இம்மூன்றையுமுடையஇவரை யிவருடையகுடும்பத்தார்கள்

உபசரிக்காமல் உபேக்ஷைசெய்யத் தலைப்பட்டார்கள். குடும்பத்தாரால் புறக்கணிக்கப் பெற்ற இவருக்குக் "கருப்பைக்குண் முட்டைக்குட் கல்லினுட்டேரைக்கு:விருப்புற்றமுதளிக்கும்" மெய்யனுடைய திருவருளும், இவருடைய பூர்வபுண்ணிய விசேட்மு மொத்திருந்தபடியால் இந்நாகைமாநகரில் ஸ்ரீ நீலாயதாக்ஷியம்மன் தெற்குவீதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மெய்கண்டவேலாயுதக் கடவுளாலயத்தில், ஆண்டுள்ளார் ஏவும் ஏவற்பணிவிடைகளைச்செய்து அவர்கள் கொடுப்பிக்கும் பிரசாதவமுதையுண்டு காலந்தள்ளிவந்தார். அங்ஙனமொழுகுநாளில் ஓர்நாளிரவு பணியூற்றத்தாலுண்டாகிய சிரமமேலீட்டால் ஆலயவாகன இடைவெளியில் அயர்ந்து நித்திரைபோய்விட்டார். அப்பொழுது அர்த்தசாம முடிந்தபின்னர்ப் பிரசாதங்கொடுக்கும்படி இவரை யழைக்க, அவர் வராமையால் ஆலயத்துள் நித்திரைபோவதையறியாத குருக்கள், பிராமணப்பிள்ளை முதலியோர் ஆலயத்தைத் திருக்காப்பிட்டுத் தத்தமிருப்பிடம் போய்விட்டார்கள். பிறகு நடுச்சாமத்தில்இவர்நித்திரைதெளிந்து பார்க்கையில் கோயில் திருக்காப்பிட்டிருக்கக் கண்டார். பசி அனல்போல் கொளுந்தியது. என்செய்வார்? இன்னது செய்வதென்றறியாமல் பசிநோய் வருத்த வருந்தும் இவருடைய பசியையாற்றத்திருவுவுள்ளங்கொண்ட ஸ்ரீ மெய்கண்ட வேலாயுதமூர்த்தி அவருக்கு வழக்கமாய் அன்னங் கொடுத்துவரும் தங்கோயிற் பிராம்மணப்பிள்ளைவடிவங்கொண்டெழுந்தருளி இவர்முன் தோன்றி என்ன? அழகுமுத்து என்று வினவ, இவர்தாம் நித்திரைபோன விஷயத்தைச்சொலலிப்பசிநோய் தன்னை அளவுகடந்து வருத்துவதால் அன்னங்கொடுக்கவேண்டுமென்று விண்ணப்பித்தார். உடனே ஐயராய்வந்தமெய்யர் திவ்யப் பிரசாதமும், தீர்த்தமும்கொடுத்தருள், இவர் உண்டு

பசிநோயோடுநீளத்திருந்துமாளாத்துயர்தந்து வந்த பூர்வகர்மநோயும்நீங்கப்பெற்றுக்கலைதீர்ந்துகளிப்புற் றிருந்தார். அப்பொழுது ஐயர், "ஏ! அழகுமுத்து ஏதாவதுபாட்டுப்பாடுவாயாக" வென்றருள, "ஐய னே! கல்விமணம் வீசப்பெறாத நிரக்ஷரகுக்ஷியாகிய தமியேன் எவரைக்குறித்து எவ்வாறுபாடவல்லேன்" னென, நவரஸமொழுகக் கவிபாடுந்திறமையைத் தந் தருளி "நான்தான்மெய்கண்டவேலவன், என்னை யேபாடுவாயாக" வென்று திருவாய்மலர்ந்து மறைந் தருள, கவிபாடுஞ் சக்தியுண்டாகிக் கடல் மடைதிற ந்தாற்போல ஸ்ரீமெய்கண்ட வேலாயுதசதகம், என் னும் நூலை ௧00 செய்யுள்களாற் பாடிமுடித்தார். அன் றிரவுகழிந்து விடியற்காலையில் ஆலயத் திருக்கதவந் திறப்போர் வந்து திறந்து பார்க்க உள்ளே வியாதி நீங்கப்பெற்றுக் கடல்மடைதிறந்தாற்போற் கல்வி மடைதிறந்து கந்தவேள் சந்நிதியிற் சந்தக் கவிபாடி க்கொண்டிருக்கும் இவரைக் கண்டு அதிசயித்தார் கள். அழகுமுத்து என்ற இயற்பெயர் காரணப் பெயராகும்படி நேற்றுவரையிலிருந்தகொடியவியாதி யும், கடிய கல்லாமையும்நீங்கிமன்மத ரூபம பெற்றுக் காளமேகம் பொழிவதுபோல் கவிமழைபொழியும் அதிசயத்தைக்கண்டுவியலாதார் யார்? பொய்கண் டார்பா லணுகாத மெய்கண்ட வேலவரின் திரு வருட்டிறத்தை யாவருங்கொண்டாடினார்கள். 'ஐய னதருளைப்பெற்றோர்க் கதிசயமிதன்கொல் மூன்று வையமுத்தொழிலுஞ்செய்யவல்லவரவரேயன்றோ?' நிற்க அன்றுமுதல் அழகுமுத்து என்பதோடு புலவ ரென்பதையுங் கூட்டி அழகுமுத்துப்புலவரென்று யாவரும் வழங்கி வந்தார்கள். அதன்பிறகு "திறப் புகழ், மெய்கண்டவேலாயுதவுலா" என்னும் பிர பந்தங்களை ஸ்ரீ குமாரக்கடவுள்பேரிலும், ஸ்ரீ காயா ரோகணசுவாமிமேல் "குறவஞ்சி" என்றபிரபந்தத் தையும் பாடிமுடித்துத் திருவருட்செல்வராயிருந்து

ஓர்நாள் • சீர்காழிக்குச் சுவாமி தரிசனூர்த்தம் சென்றிருந்தகாலையில்திருமேனிக்குப்பரிபூரணகாலம்வந்துவிடஅவ்விடம்பரிபூரணமடைந்த அந்தநாள்நாழிகையில் இவ்விடம் நாகை ஸ்ரீமெய்கண்ட வேலவமூர்த்தி சந்நிதியில் ஷை புலவர்பெருமான் நுழைந்ததாக யாவருங்கண்டு திரும்பக் காணப்பெருது அதிசயமுற்றுப் பிறகு சீர்காழியில் திருமேனியை நிறுத்தி ஸ்ரீமெய்கண்டவேலவரின் திவ்விய திருவடி நீழலில் ஐக்கியமானது தெரிந்து திருவருளைச் சிந்தித்து வந்தித்துக் களிப்படைந்திருந்தார்கள்.

இங்ஙனம்,

கலியுகாதி ருOOஉ
சார்வரி-ஷூ
ஆவணிமீ

ஜி. சதாசிவம்பிள்ளை.
"நீலலோசனிப்" பத்திராதிபர்.
நாகபட்டினம்.

ஸ்ரீமெய்கண்டவேலவரின் திருவடிவாழ்க!

சுபம்.

உ

வேலுமயிலுந்துணை.

ஸ்ரீமெய்கண்டவேலாயுதசதகம்.

விநாயகர் காப்பு.

பின் முடுகு வெண்பா.

காலாயுதத்தான்மெய் கண்டவேலாயுதன்மேல்
வேலாயுதச்சதக மேயுரைக்கச்—சேலார்கண்
கும்பதனச் சம்பிரமக் கொம்பிமயத் தம்பிகைசொற்
கம்பமதத் தும்பிமுகன் காப்பு.

நூல்.

கலிவிருத்தம்—பிரிந்திசை வண்ணம்.

பொன்பூத்தநூ புரப்பாதமும் புரிபூத்தமார் பீராறுதோள்
முன்பூத்தகண்முன்னன் குடன்முடியாறுகைவடிவேலுமாய்
கொன்பூத்தவென் னிதயத்திலே குடிகொண்டருள்கூர்வா
ய்குற, மின்பூத்தயா காசண்முகா வேலாயுதா வேலாயுதா.

சனவுக்குளே நீவந்தெனைக் கலையோதெனக் கற்பித்ததும்
நினைவுக்குளே கண்டேனலால் நினைவுக்கது நிசமல்லவே
சுனையுற்றநீர் நிழலல்லவே தோன்றுந்துணை யாய்நின்றிடு
வினையத்தையென்சொல்வேனையாவேலாயுதாவேலாயுதா.

பன்னாளெனு மூவொன்பதிற் பதின்மூன்றநாள் பதினேழு
நாள், இன்னாளினி யின்னாளையே யென்பாரிவை யென்நா
ளுமே உன்னாமனத்திரிவேனினி யொருநாளுமே திருநா
ளுமாய், மின்னாளிடப்பாகன்றரும் வேலாயுதாவேலாயுதா.

உனையே தெய்வ மாதாபிதா வுபதேசசற் குருவென்று நான்
நினையேனவாவொழியேனெறிகில்லேன்றிருவெண்ணீறுமே
புனையேனொரா றெனுமந்திரம் புகழேனலோ திசழ்வானவர்
வினையேசெய்வஞ் சனையாளுவாய் வேலாயுதா வேலாயுதா.

பனைதீர்த்தவன் சிறைதீர்த்தவன் பழிதீர்த்தவன் பகை தீர்
த்தவன், கனைதீர்த்தவன் முறைதீர்த்தவன் கலிதீர்த்தவன்
கருதார்கள்வஞ், சனைதீர்த்தவன் முனைதீர்த்தவன் தமிழ்
தீர்த்தவன் றமிழ்ப்பாண்டியன், வினைதீர்த்தவன் நீயல்ல
வோ வேலாயுதா வேலாயுதா. (௫)

கானக்கொடி வலமாகியுன் கண்ணன்கொடி யிடமாகியுன்
ஞானக்கொடி யவர்பால்வரும் சோழன்கொடி போய்ச்சிறு
வாய்,வானக்கொடியிடனாவினன் வாகைக்கொடிதானுங்குடர்
மீனக்கொடி யானென்பனோ வேலாயுதா வேலாயுதா (௬)

ஒறுப்பார்களுக் கொருநாட்பல னோங்காரமா மாங்காரமே
பொறுப்பார்களுக் காணுலுமிப் புவிமட்டுமே புகழென்று
தான், மறுப்பாடிலாக்குறள்சொல்லிய வகைகண்டுமே வன்
மத்தினுல், வெறுப்பார்களுக் கென்னேபலன் வேலாயுதா
வேலாயுதா. (௭)

எறும்பானையீ றெடுத்தேனுட லின்பம்பிறப் பொழிந்தேனிலை
யுறும்பாவமென் போற்செய்தபே ருலகத்தொரு வருமில்லை
யே, நறும்பாவினெய்போற்கல்வியும்ஞானத்தையும்நல்காவி
டில், வெறும்பாலடையமுதாகுமோ வேலாயுதாவேலாயுதா.

எறிக்குஞ்சுடர்த் தீபத்தையே யேற்றும்பொழு திருளான
தைப், பறிக்குஞ்சுடர் தானென்றதைப் பார்த்தோருடைப்
படலத்தையே, மறிக்குமிட மதுகண்டலோ மாயைக்குநீவ
கைசொல்லுவாய், வெறிக்கும்புய தயபாரனே வேலாயுதா
வேலாயுதா. (௯)

நீறிட்டவர் முகபங்கயம் நித்தந்தரி சித்தாற்பலம்
மாறிட்டம ருலகாளுவார் மறுஜென்மமும் வாராதென

வேறிட்டசே வுடையார்மழு வேற்கின்றது மிதற்கல்லவோ
வீறிட்டநீ றனுபூதிதான் வேலாயுதா வேலாயுதா. (௧௰)

ஆளாமைபோ லடங்காமலே யஞ்சாமையாயறியாமையாய்
வாளாமை நேத்திரமேபெறு மானார்கள்மேல் மயலாகியே
தாளாமையே செய்தேனலாற் றன்மந்தலை காப்பாமெனும்
வேளாமையே செய்தேனிலை வேலாயுதா வேலாயுதா. (௧௧)

அளக்கிற்பெருங் கடலைக்கர மடக்குமுனி கயத்தூமையா
விளக்கிற்கலை போதித்தநீ யெமக்கெப்படி போதித்திடில்
துளக்கிற்புனல் வாகாளுமேசொல்லத்தகுமெய்ஞ்ஞானமும்
விளக்கிற்கொழுந் தீபந்தமாம் வேலாயுதாவேலாயுதா. (௧௨)

துளாவுமதிப் பிடிதோணிமேற் றூரத்தினிற் செல்வோமென
அளாவுமனம் பேராசையி லளந்தத்தையே யளப்பாயது
களாவின்கனி மையானதுங் காய்நின்றபின் கனியுண்டை
யாம், விளாவின்கனி கனியல்லவோவேலாயுதாவேலாயுதா.

தளையும்பெருங் குடும்பச்சுமைதாங்காதுதத்தளித்தால்மொழி
யுளையும்சறுக் கலுமாகினு லுத்தியோகமெய்ப் படிச்செய்கு
வேன், அளையுங்கலை தெள்கல்வியோன் றற்குலினியானுள்
வனோ,விளையும்பயிர்முளைசொல்லுமேவேலாயுதாவேலாயுதா

வள்ளற்சடை மீதேறியே மதித்தோணியாய் மாமக்கரா
வெள்ளப்படாத் துடுப்போடுகொக்கிறகென்னும்பாய்முறை
தூக்கியே, பள்ளப்புனற் பாகீரதிப்பாவைக்குளேபாலாழி
யாம்,வெள்ளத்தினில்விளையாடுவாய்வேலாயுதாவேலாயுதா

வளர்க்கின்றமாமறைநான்முகன் மாலீசனும் வகையாகவே
யளக்கின்றமுக் காணிக்குநீ யருக்காணியாய் யாவர்க்குமே
வுளக்கண்ணிருப் பதையெண்ணிலா ரூரூர்தொறுமுழல்
வாரவர், விளக்கன்றியேதீத்தேடுவார்வேலாயுதாவேலாயுதா

கோளூர்வரா கழுமூரவே கூறுங்கர ணமும்யோகமும்
நாளூர்வதுந் திதியூர்வது நமனூர்புகும் நாளல்லவோ
மாளூர்விழிக் குறமாதுதெய் வானைத்திரு மயில்பாகனே
வேளூரனே வயலூரனே வேலாயுதா வேலாயுதா. (௰௭)

வள்ளிக்குநே ரிடையார்க்குமொள் வாளுக்குநேர் விழிநாசி
கை, எள்ளிக்கைநேர் மொழியார்க்குமவ் வீசன்விழி யால்
வெங்குறை, கொள்ளிக்குள மெலியாமலே கூர்வாயருள்
கொம்பொன்றிலா, வெள்ளிக்குநா யகசுந்தரா வேலாயுதா
வேலாயுதா. (௰௮)

எள்ளாடுசெக் கைப்போலவு மீக்காலையா டற்போலவுங்
கள்ளாடுபூ மணம்வண்டுபோற் காப்பாற்றுயிர் கவர்வானெ
மன், பள்ளாடுவேளையில்வந்துகாபலதெய்வநின்னிகர்வெய்
துமோ,வெள்ளாடரிப்போலாகுமோவேலாயுதாவேலாயுதா

உள்ளானைமெய் யுரையானைமா லொழியானைவீண் பழியா
னைபொய், தள்ளானைவஞ் சகத்,தானைநொய் தவிழானைப்பா
தகத்தானர, கெள்ளானைவொன் றறியானைநின் றேத்தானை
நீ ரெட்சித்திடாய், வெள்ளானைமா முகத்தான்றுணை வே
லாயுதா வேலாயுதா. (௨௰)

நாளைக்கிருப் போமென்பதும் நம்பிக்கையோ நற்சந்தன
வாளைக்களந் தனில்வைத்திடும்வா றல்லவோமாய்கின்றநாள்
காளைக்கடா வினிலேறிவெங் கட்காலனூர்கடினஞ்செயும்
வேளைக்குநீ துணையாகுவாய் வேலாயுதா வேலாயுதா.(௨௧)

கோளொன்றுமே சொல்வார்புகழ் கொள்ளாரையுங் குன்
றெருப்பதாங், தோளென்றுநம் துரையென்றுசெஞ் சுடரெ
ன்றுநீ துணையென்றுபொற், றாளென்றுசொன்னதுமன்றி
யே சற்றும்பயமில்லாதுசெவ், வேளென்றபா தகமென்று
யோம் வேலாயுதா வேலாயுதா. (௨௨)

வளையாடமே கலையாடநூல் வடமாடநூ புரமாடவே
இளையாடவே கொடியாடவே கிளியாடவே யளிபாடமர்
தளையாடவே நடமாடுமோ தரைமேவுகா மியையாளுவாய்
விளையாடுமோ மயில்பாகனே வேலாயுதா வேலாயுதா. (௨௩)

நீளாமலே வினைகாலமும் நேராமலே நிரையத்தல
ஆளாமலே பொறியாலுள மலையாமலே யனல்வாயுடல்
மாளாமலே மாண்டாலுனை மறவாமலே மறுஜென்மமு
மீளாமலே யெனையாளுவாய் வேலாயுதா வேலாயுதா.(௨௪)

சூழாமலே கலிதீவினை தொடராமலே படர்நல்வினை
பாழாமலே யயனுருப் பண்ணாமலே பெண்ணாசையா
லாழாமலே யமதூதர்வந் தணுகாமலே நரகத்தின்வாய்
வீழாமலே யெனையாளுவாய் வேலாயுதா வேலாயுதா.(௨௫)

அழலுக்கிடும் விறகாகுமென் றறியாமலே பொறிமாதர்கள்
குழலுக்கிடும் மலர்யாவையுங் கொண்டேகியுன் றண்டாம
ரைக், கழலுக்கிடும் வகைசற்றுமே கருதாமலென் புருடா
யுளும், விழலுக்கிடும் புனலாகுமோ வேலாயுதா வேலாயுதா.

வழியாயிரங் காட்டாமலோர் வழியாயிரங் கரைசெய்குவா
ய், பொழியாயிரம்பேராயுனைப் புகழத்தொழத் தெரிசிக்க
வே, மொழியாயிரம் நன்னுவுடன் முளரிக்கர மோராயிரம்
விழியாயிரம் பெற்றேனிலை வேலாயுதா வேலாயுதா. (௨௭)

பூவாகியுன் னடிசார்ந்திலேன் பொடியாகியுன் மெய்தீண்டி
லேன், பாவாகியுன் பேர்தாங்கிலேன் பணியாகியுன் புயமா
கிலேன், றேவாகியுன் படையாகிலேன் சேயாவடி யேனுய்
வனோ, மேவாதகு ரனைவென்றவா வேலாயுதா வேலாயுதா.

தவத்துக்குடம் பெடுத்தேனிலை தாரித்திரத் தோற்றத்துட
னவத்துக்குடம் பெடுத்தேன்பிணி யாசைக்குடம் பெடுத்

தேனறும், பவத்துக்குடம் பெடுத்தேன்பிறர் பழிப்புக்குடம் பெடுத்தேன் மன, விவத்துக்குடம் பெடுத் துய்வனோ வேலாயுதா வேலாயுதா. (௪௯)

காலாயுதா வாசாலகா காபாலிசே யாபூதரா
சீலாவிசா காதாபரா தேவாதிபா சேனாதிபா
நாலாகலா கோலாகலா ஞானோதயா வேதோத்தமா
மேலானவா நாகாபுரா வேலாயுதா வேலாயுதா. (௫௰)

மாலென்றுமென் னிடமாகையால் மடவார்கள்கண் வாளென்றுசெஞ், சேலென்றுமைக் கடலென்றுமத் தேனென்றுமம் மானென்றுவெங், கோனென்றுசொன் னதுமன்றியே குணகீனருன் கூசாமலுன், வேலென்றபா தகமென்றுபோம் வேலாயுதா வேலாயுதா. (௫௧)

வல்லங்கமா முலைகாட்டியும் வாளங்கமாம் விழிகாட்டியு
மல்லங்கமாங்குழல்காட்டியு மமுதங்கமாமொழிகாட்டியும்
பல்லங்கமாம் நகைகாட்டியும் பங்கப்பரத் தையர்செய்திடும்
வில்லங்கமே தீர்த்தாளுவாய் வேலாயுதா வேலாயுதா.

கல்லாதவன் றுதியாதவன் கருதாதவன் கற்றோர்கள்பாற்
செல்லாதவன் பணியாதவன் றெளியாதவன் செவியாதவன்
பொல்லாதவன் பூணாதவன் பூசாதவன் புலனைந்தையும்
வெல்லாதவ னினியுய்வனோ வேலாயுதா வேலாயுதா. (௫௩)

விலங்கைகவலி யம்மென்றடி மேலர்ச்சனை செய்யாக்கொடு விலங்கைப்புரப்ப தமுன்கடன் மிகவெம்பினே னுனைநம்பினேன், விலங்கைச்செயம் பெறுசூரனை வென்றவிபூ தர்கள்காவினில், விலங்கைத்தறித் திடுகந்தனே வேலாயுதா வேலாயுதா. (௫௪)

மாலுக்கிணை தானாகியே வழங்காதவன் வயிறேபெருஞ் சாலுக்கிணை தானானவன் றருவாரையுந் தடைசெய்குவே னுலுக்கிணை யாய்நல்கிடா தளிக்குந்தரு விக்குந்தடை வேலுக்கிணை தானவனோ வேலாயுதா வேலாயுதா. (௫௫)

சேலுக்குவேல் வாளுக்குமை திளைக்குங்கரு விளைக்குமது
காலுக்குநீள் கடலுக்குமக் கடுவுக்குமா வடுவுக்குவெங்
கோலுக்குமங் குடங்கைக்குநற் குவளைக்குமா னெமனுக்கு
ம்வை,வேலுக்குநேர்விழிவள்ளிசேர்வேலாயுதாவேலாயுதா.

மாலைப்பிறை போற்செல்வமும் வளராமலே வறுமைத்துய
ர்க், காலைக்கதி ரெழுமுச்சியிற் கனலொத்திடுங் கடினத்தி
னால், ஆலைக்கிடுங் கழையாகினே னழலுக்கிடு மெழுகாகி
னேன், வேலைக்கிடுந் தூறாகினேன் வேலாயுதா வேலாயுதா.

தோலுந்துணை யென்புந்துணை துணையாகையால் துணையா
கிய, காலுந்துணை கையுந்துணை கண்ணுந்துணை கண்புக்
கெலா, மாலுந்துணை யதுபோல்வரு மாதங்கநேர் போதி
லுன, வேலுந்துணை மயிலுந்துணை வேலாயுதா வேலாயுதா.

தலைக்கப்புற மோடும்புனல் சாணோடியென் முழமோடியென்
மலைக்கப்புற முயர்பாவமும் வளர்ந்தாலுயும் வகையேதினி
நிலைக்கும்படி தயைசெய்குவாய் நீயன்றிவே றில்லைப்பிறை
மிலைக்குஞ்சடைப் பரமன்றரும் வேலாயுதா வேலாயுதா.()

நற்புத்தியா நன்மார்க்கரா நன்ஞானரா நல்லோர்வயிற்
றுற்புத்தியி னற்கோள்பதி னோராமிடத் துதயஞ்செயக்
கற்புத்தியாய்க் கதிராளர்போற் கற்பித்தியாய் கருணாகரா
வெற்பத்திமா முகனார்துணை வேலாயுதா வேலாயுதா. (ச0)

நாலாகலைக் கீரர்க்குவேல் நடத்தும்படி நமனெய்தினால்
சேலாகிய விழிவள்ளியார் தெய்வானையாந் தேனாருடன்
மாலாகிநீ விளையாடினால் மயிலாகிலு மயில்தப்பினால்
வேலாகிலும் வரக்காட்டுவாய் வேலாயுதா வேலாயுதா. (சக)

தலையாந்திறப் பிணைகாட்டியுந் தாளாந்திறச் சிலைகாட்டியு
மலையாழியில் விழுவார்கள்போ லழுந்தாமலு மிதவாமலுந்
தொலையாதசஞ் சலவாழ்க்கையிற் சுழல்போலொரு சுறவாய்
வரும், விலைமாதர்பா லுறவாவனோ வேலாயுதா வேலாயுதா.

தாரகத்தையே செய்தேனலாற் சுகிர்தத்தையே செய்தே னிலே, யுரகத்தினுக் கமுதங்கொடுத் துறவாடியே பெறு நஞ்சுபோல், நரகத்தையே பெறுமெய்ப்பொருள் நானல்க வே யூனல்குவார், விரசத்திலே மனம்வைப்பனோ வேலா யுதா வேலாயுதா. (சங)

சரதத்தையே சொல்லாமலே சரதத்தையே சொல்வார்ம தன், நிரதத்தையே நிகரல்குலா ரின்பத்தையே யன்புற்று நான், சுரதத்தையேசெய்தேனலாற்சுகிர்தத்தையேதருகார் த்திகை, விரதத்தையேசெய்தேனிலேவேலாயுதாவேலாயுதா.

காரானமே னியன்வாசவன் கஞ்சாசன னஞ்சானன ஞாராலுமேமுடியாவண்ணம்யாமேமுடித்தருள்வோமெனச் சூராதிசூ ரனைவென் றவிண் டொடுக்கிடத் துவசம்பெறு வீராதிவீ ரனும்நீயலோ வேலாயுதா வேலாயுதா, (ருச)

அருந்தாதைதாய் மகன்றாரமா மடும்பாரமே சுமந்தாசை யால், வருந்தாதெலா மெலிந்தோயவோ வலைந்தேறுகூ னுடம்பானவா, ரறிந்தாரிதோ மடிந்தாரையோ வெனும் போதிலே செமுந்தீயின்வாய், விருந்தாகவே யிருந்தேனை யாள் வேலாயுதா வேலாயுதா. (சுரு)

துரும்பானதைத் தூணாக்குவாய்த் தூணானதைத் துரும்பா க்குவா, யரும்பாரமே ருவைரேணுவா யணுவானதை மக மேருவா, யிரும்பாரிற்செய் வாய்சாட்டைதா னில்லாமற் பம் பரமாட்டிய, விரும்பாண்மையின் றிறமென்சொல் வேன் வேலாயுதா வேலாயுதா. (சுஎ)

பூரித்திடுஞ் சுடரித்திடும் புளகித்திடும் பூணரமே பாரித்திடு மிளநீரெனப் பச்சென்றிடும் வெச்சென்றலங் காரித்தசெப் பெனவிம்மியே கச்சுக்கடங் காமற்பொரும் வேரித்தனக் குறமங்கைசேர் வேலாயுதாவேலாயுதா.(சுஅ)

வருதிட்டமும் பொருதிட்டமும் மதிதிட்டமும் விதிதி ட்டமு, மொருதிட்டமோ பலதிட்டமோ வோதிட்ட

சொல் வாதிட்டமே, பொருதிட்டசூரனைவேலினாற் பொ
ன்றிட்டுறே நினைதென்னவே, விருதிட்டசேவற்கேதனா வேலா
யுதா வேலாயுதா. (சகூ)

குரலைக்கொடி சாவற்பரி கொங்கைத்துணை பதியாயுத
மிரலைக்கக விடைநாரமின் னென்றாலுநீ பொறுக்கச்சடன்
நரலைக்கொரு மகராகர நயனத்திலே கைபட்டிடில்
விரலைத்தறித் திடுவார்களோ வேலாயுதாவேலாயுதா.(ரு௰)

மயில்மஞ்சினைக் கண்டாற்போல மகிழ்வெய்தியே வாஞ்சி
த்தபேர்க், கயில்மஞ்சனப் பதமச்சர ணாதாரமென் றறியா
மலே, துயில்மஞ்சமா ளிகைசெம்பொனே சுகமென்றுமே
துணியும்பொலேன், வெயில்மஞ்சளே நிலையென்பனோ
வேலாயுதா வேலாயுதா. (ருக)

ஐகண்டநெல் வியைப்போலவே கரங்கண்டுளங் களி
கூரவே, யைகண்டமே லுறுநாளில்வந் தஞ்சேலென வரு
ள்செய்குவாய், செய்கண்டநா கையிலுத்தமத் தியாகேசர்
தன் சேயாகுகா, மெய்கண்டவே லாசண்முகா வேலாயுதா
வேலாயுதா. (ருஉ)

பயனாகைக்கே தமிழ்பாடினாற் பசர்தீபமாம் பரிசித்திடில்
வயனாகைச்கே யெழுதாவிடி லாற்றங்கரை மரமல்லவோ
கயனாகைக்கே சரிமார்க்கமாக் காலாடிதன் றுணையானவர்
வியனாகைக்கே கயவாகனா வேலாயுதா வேலாயுதா (ருங)

ஈயாமலும் நல்லோர்களை யெண்ணாமலு மெண்ணிக்கலை
யாயாமலுஞ் சேளாமலு மறியாமலு மறிவீனர்பா
லோயாமலுந்தமிழ்சொல்லியுமுண்டோபலனுனைநம்பினே
ன், வீயாமலுன்னருள்செய்குவாய் வேலாயுதா வேலாயுதா.

கைசொல்லுவேன் புடைவைக்குளே கைச்சாடையுஞ் சொ
ல்வேன்மழு, நெய்சொல்லுநின் னையென்பது நீயென்றுளம்

நினையாதவன், பொய்சொல்லுவேன் வசைசொல்லுவேன் புறஞ்சொல்லுவேன் பிழைசொல்லுவேன், மெய்சொல்லு வே னறிகின்றலன் வேலாயுதா வேலாயுதா (நிரு)

தும்பிக்கையா னவனுக்கொரு துணையானவா சுரர்சேவிதா நம்பிக்கைநீ யல்லாமலே நாடேனொரு தெய்வத்தையு மம்பிக்கைநேர் விழியார்மொழி யார்வுக்குடை யானென்று தான்,வெம்பிக்கைவிட்டாலுய்வனோவேலாயுதாவேலாயுதா.

ஆம்போதும்வேல் மயிலுந்துணை யாகாமலே யாசங்களும், போம்போதும்வேல் மயிலுந்துணை பொறிநுட்பமும் நெறி தப்பியே, சாம்போதும்வேல் மயிலுந்துணை சடம்வீழ்ந்த பின் பிடிசாம்பலாய், வேம்போதும்வேல் மயிலுந்துணை வேலாயுதா வேலாயுதா. (நிஎ)

காம்பாகுமென் றோள்வல்லியார் காந்தாபுகழ்ச் சேந்தா விடப், பாம்பாகுமா பரணன்றரு பாலாதிருப் புகழுக்குமெ ய்,யாம்பாகுபோல் நக்கீரனு ஈருளுந்தமிழ்க்கடியேன்றமிழ் வேம்பாகுமே கரும்பாகுமோ வேலாயுதா வேலாயுதா (நிஅ)

காப்பாகிலும் படைப்பாகிலுங் கருதாமலே யழிப்பாகிலு மூப்பாகிலும் வேள்வித்தொகை முடிப்பாகிலு மற்றோரிலுங் கோப்பானசெந் தமிழ்பாடியே கொண்டாளுமென் குல தெய்வம்நீ, மீப்பானுவை நிகர்குண்டலா வேலாயுதாவேலா யுதா. (நிகூ)

அப்பத்தரா மறுபத்துமூ வடியார்களுக் காயுன்பிதா செப்பத்தொடு வந்தாட்கொளுஞ் சேதிக்குநான் சிறியே னெனிற், சொப்பத்தில்வீழ் கரியென்னவே கூற்றுனவன் சொடுபோகவே, வெப்பத்துடன் வாராமலாள் வேலாயுதா வேலாயுதா. (கூ0)

நீந்தாத்துயர் கட்டாற்றினில் நீகைவிடில் நிலையேதினி சேந்தாகடம் பாசண்முகா சேயாகுகா தெய்வானைதன்

காந்தாசிலம் பாகாங்கயா கந்தாகதிர் காமத்தினில்
வேந்தாவருள் கூர்ந்தாளுவாய் வேலாயுதா வேலாயுதா.(௬௧)

அந்தப்பதஞ் சரியைக்குமெய் யவிரப்பதங் கிரியைக்குமே
யிந்தப்பதம் யோகர்க்குமே யீற்றுப்பதம் ஞானர்க்குமே
தொந்தப்பத மானுவினி சும்மாவிடு வேனோவரா
விந்தப்பதம் தந்தாளுவாய் வேலாயுதா வேலாயுதா. (௬௨)

சிந்தாகுலந் தீர்ப்பாயினித் தீராவிடிற் செவ்வேளெனக்
கந்தாவெனச் சொல்வேனுனைக் கடம்பாபெருங் கற்பாவை
தன், மைந்தாவெனப் பித்தன்றரு மகனேயென வசைபேசு
வேன், விந்தாசலப் புயபாரனே வேலாயுதா வேலாயுதா.

வந்திட்டது கண்டேனலால் வாராமையைக் கண்டேனிலை
நொந்திட்டதா விக்கென்பனோ நோய்சேருடற் கேனென்
பனோ, முந்திட்டவோ நின்றோப்பதா மூன்றும்பிரி பாகந்
தரில், வெந்திட்டதும் வினையெய்துமோ வேலாயுதா வேலா
யுதா. (௬௪)

போதாந்தமாய்ச் சுடரெய்தியே போய்நின்றபின் னாந்த
மாய், மாதாந்தமாய் வருஷாந்தமாய் வயதாந்தமாய் வருமு
ன்னரே, நாதாந்தனே லோகாந்தமாய் ஞானந்தமே வரநல்
குவாய், வேதாந்தனே யேகாந்தனேவேலாயுதாவேலாயுதா.

முத்தேபது மத்தேவளர் முதலேயொரு முத்தேவர்சம்
பத்தேமறைப் பொருளேபொருட் பரமேபர மானந்தமே
சித்தேபரி சித்தோருளத் தேவேமிகத் தெய்வப்பயிர்
வித்தேவிசைக் கதியாதிபா வேலாயுதா வேலாயுதா.(௬௬)

மதனப்படும் மலர்தைக்கவே வடுவிட்டபுண் ணொருபக்கமா
ய்ச், சதனப்படா முலையார்நகந் தைக்கின்றபுண் ணொருப
க்கமா, யதனப்படும் வலியோடெம னடுவாள்புணி லிடுகோ
லென,விதனப்படுமெனையாளுவாய்வேலாயுதாவேலாயுதா.

மாதாபிதா வாசானுநீ மாமானுநீ மாதேவனீ
யாதாரநீ யாகாயநீ யாகாரநீ யாள்வானுநீ
தாதாவுநீ தாரானுநீ சார்வானுநீ சாரானுநீ
வேதாவும்நீ மாவீசனீ வேலாயுதா வேலாயுதா. (௬௮)

வேதாரணி யஞ்சேர்ந்திடில் விடுவார்களோ சேவிப்பது
வேதாரணியடிமைப்பணிவிடையல்லவோ வினிமேற்குறை
வேதாரணிச் சடிலன்றரு விழியேவிழி மணியேமிக
வேதாரணி மணிமார்பனே வேலாயுதா வேலாயுதா. (௬௯)

மதிவண்ணமா முகவண்ணமு மலைவண்ணமாம் புயவண்ண
மும், நிதிவண்ணமே னியின்வண்ணமும் நிறைவண்ணமே
விழிகொள்ளுமோ, யதிவண்ணமாங் கெதிவண்ணமே யை
வண்ணமே யிவ்வண்ணமோ, விதிவண்ணமு மெவ்வண்ண
மோ வேலாயுதா வேலாயுதா. (௭௰)

வேதண்டகோ தண்டன்றரு வேளேதிரு மெய்ஞ்ஞானமாம்
கோதண்டமால் மருகாவுனைக் கும்பிட்டவர் முன்வந்துநீ
வேதண்டவே பாரப்பிணி விட்டோடமெய் யருள்கூருவாய்
வேதண்டசூ ரனைவென்றவா வேலாயுதாவேலாயுதா. (௭௧)

கத்தூரியே யக்காரமே கர்ப்பூரமே கட்டாணியே
முத்தாரமே சட்கோணமே முக்கோணமா நிட்சேபமே
கொத்தாருவே தத்தாலுநின்கொட்டாரமேயெட்டாதுநூல்
வித்தாரநீ பத்தாமனே வேலாயுதா வேலாயுதா. (௭௨)

வேதத்துநற் பொருளென்றுனை மெய்யுண்மையாய்விரும்பி
க்கொள, வேதத்துவநிலையாமதுமிரு கண்டுவின்மகனுக்குற
வேதத்துவ ரும்போதுபொய் மெய்யாகவு மிலையோமிக
வேத்த்துமஞ் ஞையிலேறிய வேலாயுதா வேலாயுதா. (௭௩)

கண்ணேறுசற் றணுகாமலே காப்பாயெனைக் காராலுமோ
தொண்ணூறுட னொருபத்துமே சுகமாயுனைத்தொழுதேத்த

வே, தண்ணீறுமெய்ஞ்ஞானேதயர்தருநீறுசுந்தரஸ்ரீறெனும் வெண்ணீறுதந் தெனையாளுவாய் வேலாயுதா வேலாயுதா.

பூணுசையுங் கலையாசையும் பொருளாசையும் பொருள்சேர்ந்திடிற், பேணுசையும்மகவாசையும்பெண்ணுசையும் மண்ணுசையு, மூணுசையும் பதிருறென வோதாசையும் பேராசையாம், வீணுசையென் ருெழியுங்கொலோ வேலாயுதா வேலாயுதா. (எரு)

கண்ணப்பர்கா லுதைபட்டதுங் கற்சாக்கிய ரெறிபட்டது மண்ணப்படும் விசயன்கைவில் லடிபட்டது மரனல்லவோ வெண்ணப்படு மோட்சந்தா விலையோவடி யேன்சொல்விய விண்ணப்பங்கேட் டருள்கூருவாய் வேலாயுதாவேலாயுதா.

தீண்டாவழும் பிரத்தந்தசை சேர்ந்தென்புதோல் போர்த்தன்புட, னூண்டாங்குமொன்பது வாசன்மேலொருவாசலி லுண்டாகியே, மாண்டாலொரு பிடிசாம்பலாய் மண்ணுய்விடு மாயச்சடம், வேண்டாமையா வேண்டாமையா வேலாயுதா வேலாயுதா. (எஎ)

திண்டாட்டந்தீர் மன்ருட்டமே செய்வாய்தயித் தியரான்வர், கொண்டாட்டமுங் களியாட்டமுங் குடியாட்டமுங் கூத்தாட்டமும், வண்டாட்டமும் வம்பாட்டமும் மாருட்டமும் போராட்டமும், மிண்டாட்டமுந் தீரப்பொரும் வேலாயுதா வேலாயுதா. (எஅ)

கண்டாமரை முகந்தாமரை கைத்தாமரை கழலாமடி யொண்டாமரை வாய்த்தாமரை யுளத்தாமரை யோர்ந்தெய்துவாய், வண்டாமரைக் கொடிபோலளி வான்முட்டவே மதியானது, வெண்டாமரை யாம்நாகையில் வேலாயுதா வேலாயுதா. (எகூ)

தூண்டாமலும் பாபங்கள்பொய் சொல்லாமலும் விலைமாதரைத், தீண்டாமலு மறிவீனாைச் சேராமலுஞ் சமயங்க

ளிற், ருண்டாமலும் பிணியால்மனஞ் சலியாமலும் பரதா
ரமே, வேண்டாமலுமருள்கூருவாய்வேலாயுதாவேலாயுதா.

ஆண்டுபிறக் குந்திங்களி ராறிற்றிதி யைம்மூன்றினு
மாண்டுபிறக் கும்மேழினில் வாரமிரு பத்தேழிஞ
னீண்டுபிறக் கும்யாவுமே நிலையாதகா ரணமல்லவோ
மீண்டும்பிறப் பெய்தாமலாள் வேலாயுதா வேலாயுதா. ()

இடியாலடி படுமாசுண மெனவேவரு மெமதூதர்கைத்
தடியாலடி படுமென்றுயர் சாற்றுந்திரு வெண்ணீறெனும்
பொடியாலடி படவேயருள் புரிவாயுனைப் போற்ருர்கள்
போல், மிடியாலடி படநீதியோ வேலாயுதா வேலாயுதா.()

படவும்படா தில்லாமையிற் பட்டாலுமோ பாவங்களாற்
கெடவும்படாத் தீயர்களைக் கெஞ்சப்படா துண்டிக்கிரை
யிடவும்படா குடிமைச்சுமை யெடுக்கப்படாதென்ருலுமோ
விடவும்படா தென்செய்குவேன் வேலாயுதா வேலாயுதா.()

உடலைப்பல நாளுமெடுத் தோய்வின்றியே யொழியாப்
பெருங், கடலைக்கடப் பதுமெந்தநாட் கப்பற்ககப் படுகாக
மாய், நடலைக்குடி மையைநம்பியே நமனுக்கிறைக் குடியா
வனேே, விடலைக்குரு பரநாதனே வேலாயுதா வேலாயுதா.

ஆடிக்கைநேர் தெண்டித்தபேர்க் களித்தோர்களு மருமந்த
பொன், றேடிக்கையா லீந்தோர்களுஞ் சீர்சேடராய்ச் சீமா
ன்களாய், வாடிக்கைமேல் வாடிக்கையாய் வரப்பண்ணு
முன் மதிமந்திரம், வேடிக்கைமேல் வேடிக்கைகாண் வேலா
யுதா வேலாயுதா, (அரு)

மடப்பாவைமார் விடப்பார்வையோ நெருப்பாறுசேர் மயிர்
ப்பால்மே, நடப்பார்களோ வினிப்போதுநீ நயப்பாகநின்
னீராறுகண், ணிடப்பார்வைதா வுடற்பாதியா மலைப்பாவை
யா ருழைப்பாணியார், விடைப்பாலருள் தவப்பாலனே
வேலாயுதா வேலாயுதா. (அசு)

நடைதந்தெனை நடத்திப்பிறர் நகைதந்தது மாற்றிக்கலை
யுடைதந்தமு தூண்டந்துபூ ணொளிதந்துயர் களிதந்தருள்
மடைதந்துநல் வழிதந்தெமன் மதியாதுனைப் பிரியாத்தல
விடைதந்தெனை யாள்வாயினி வேலாயுதா வேலாயுதா. ()

எடுப்பார்களும் பல்லக்கின்மே லிருப்பார்களு மியர்தம்மிலே
கொடுப்பாரையுங் கொடுக்காரையுங் குறியாலறி வித்தாய்
கொடை, தடுப்பாரையுங் காட்டாமலே தனைவந்தடைந்
தோர்க்காயுயிர், விடுப்பாரையுங் காட்டாயினி வேலாயுதா
வேலாயுதா. (அஅ)

எட்டிக்கனி கண்டாலழ கெடுத்துப்புசிப் பாரோ॥வெறுங்
குட்டிச்சுவ ரொனுலோபனைக் குறியாவண மருள்வாய்சமர்
கிட்டிப்பொரு மசுரப்படை கெட்டுப்பிற கிட்டுச்செல
வெட்டிப்பலியிட்டுப்பொரும் வேலாயுதா வேலாயுதா.(அகூ)

உடற்கைப்பழ வினைத்தோற்பையை யூரும்புழு வுறைகந்த
லைச், சடக்கைக்குதித் துயிர்போய்விடிற் றுயுந்தொடில்
ஸ்நானஞ்செயுந், தொடக்கைக்கழு வுண்ணும்பொதிசேரற்
றைக்குறு நாற்றைப்பெரு, விடக்கைச்சுமந்தென்னோபலன்
வேலாயுதா வேல்ாயுதா. (கூ0)

மோடத்தைவே ரறநீக்கியே மோனத்தினல் ஞானத்தினற்
றூடத்தையு மறநீக்கியே சுட்டாய்ச்சொலுஞ் சட்டாக்கரப்
பாடத்தையும் வருவித்தபின் பருவப்படும் பண்டாரமாம்
வேடத்தையுந் தந்தாளுநவாய் வேலாயுதா வேலாயுதா. (கூக)

செஞ்ஞாயிறு நாள்வாங்கியே செல்லச்சமன் செங்கைப்ப
டல், பஞ்ஞாகப்பாய்ப் படுத்தோரையப்படியாக்கிலெப்ப
டியுய்குவேன். அஞ்ஞானமாந் திமிரங்களை யாதித்தன்முன்
பனியாக்கியே, மெஞ்ஞானமே தந்தாளுவாய் வேலாயுதா
வேலாயுதா. (கூஉ)

துஞ்சாமலே துயராமலே சோராமலே சோம்பாமலே
யெஞ்சாமலே யிரியாமலே யேறுமலே யில்லாமையா
லஞ்சாமல்நோ யணுகாமல்மெய் யழியாமலே யாகாமிய
மிஞ்சாமலேயருள்வாய்வரம் வேலாயுதா வேலாயுதா.(௩௩)

நேசிக்குமுன் னடியார்களை நேசிக்கவும் நின்பாதமே
பூசிக்கவு மானந்தமாய்ப் பூரிக்கவும் போற்றத்தமிழ்
வாசிக்கவு மவுனத்தினே வாழ்விக்கவுஞ் செய்யாமலே
வேசிக்குமால் கொளவைப்பையோவேலாயுதா வேலாயுதா

வெங்கைக்குநேர் சிலையாளரைவெறுவாய்க்கிலை கெட்டோர்களை, வெங்கைத்தன பதியென்னவே வீணிற்றமிழ் பாடாமலாள், வெங்கைப்பிரானருள்சேயனேமிக்கார்குறத்திக்காகவே, வெங்கைத்தருவாய்நின்றிடும் வேலாயுதாவேலாயுதா.

வாகாமலர் வேதப்பிரான் மணத்தச்சன்வைத் திடுகேப்பலை
யாகாமியக் கடல்மேற்பொறி யைம்பாயினு லலையாமலே
பாகாமெஞ்ஞா னத்தீவுறப் பதபங்கயக் கரையேற்றிடும்
மீகாமனீ தானேயலோ வேலாயுதா வேலாயுதா. (௩௫)

பகடன்புற வுயிருக்கெலாம் பறந்திட்டபுள் விலங்குக்கட
ககடன்கள வுக்காளைய ணைம்பூதியத் தாலூர்ந்திடுஞ்
சகடன்குணம்பொறைகல்விநற்றவமற்றவன் சகலர்க்குமே
விகடன்றனக் கருள்கூருவாய் வேலாயுதா வேலாயுதா. ()

மோகாடவி வளருங்கொலோ முருகாடவிக் குழலார்கள்
மேல், மாகாடவிநிலவென்னவேவாணுளெலாம்வீணுளதாம்
நாகாடவி யிடியென்னவே நமன்வந்திடும் நாள்வந்துகா
மேகாடவி திகழ்நாகைவாழ் வேலாயுதா வேலாயுதா. ()

அகுதிக்குவே ருருதிக்குமில் லாதிக்குடி லைப்பேர்வினைப்
பகுதிக்குள மெலியாதருள் பரிதிக்குநீ சுருதிக்குளார்

தொகுதிக்குநீ தகுதிக்குநீ சோதிக்குரு பரனேய்ருள்
மிகுதிக்குநீ யல்லாதிலை வேலாயுதா வேலாயுதா. (௯௯)

குகவாழிசெந் தூராவினன் குடிவாழிபுட் கொடிவாழிசண்
முகவாழிசூர்ப் பகைவாழியுன் முன்வாழிநீ பஞ்சேருமார்
பகவாழியிச் சதகந்தனைப் படித்தோர்களுங் கற்றோர்களு
மிகவாழிவேல் மயில்வாழியே வேலாயுதாவேலாயுதா(௧௦௦)

ஸ்ரீ மெய்கண்ட வேலாயுத சதகம்

முற்றிற்று.

0-1 LAM 14
N22

உ
சிவமயம்.
வேலுமயிலுந்துணை.

திருநாகையில்
திருக்கோயில் கொண்டு விளங்கும்
ஸ்ரீமெய்கண்டவேலவரென்னும்
குமாரக்கடவுள் பேரில்

திருப்புகழ்.

விநாயகர் காப்பு—வெண்பா.

வடியைப்பொருநெடுங்கண் வல்லபையாம் பச்சைப்
பிடியைப் புணர்களிற்றைப்பேணி—யடியைத்
தினம்நினைந்தாரெய்தாச் சிறப்புவேறுண்டோ
மனம்நினைந்ததெல்லாம் வரும்.

வள்ளைநிகர்குழையாள்வள்ளிக்கொடிபுணர்ந்த
கள்ளவிழும்நீபர்மெய்கண்டவர்மேல்—வெள்ளை
நிறப்புகழைப்பாரினிறுத்துதற்காவேண்டித்
திறப்புகழைச்சொன்னேன்றெளிந்து.

நாகாபரணப் பிள்ளையார் துதி.

க. தானன தனத்தன தனதன் தன
தானனதனத்தன தனதனதன
தானனதனத்தன தனதனதன—தனதான.

சீரார்சுவை முப்பழமுடனே யிள
நீர்பாயசமிக் கதிரசமாவடை
தேன்மோதக மெட்பொரி புளியோதரை கடுசோறை

தேன்மாதுள நற்கனிகுளமா ரவல்
நீடாழை பருப்பளையொடு தோசைகள்
சேதாவமுதத் துட னிவையாவையு மயில்வோனே
பாரார் கயிலைக்கிரியரனு ரருள்
வேலாயுத மெய்க்குமர சிகாமணி
பாகார் வசனக்குறமகள் பால்வரு மலர்மீதே
பாவாணர் துதித்திடு மியல்பாயொரு
நூறுன திருப்புகமெனவே முதிர்
பாமாலை யுரைத்திட வருள்கூர்வது மொருநாளே
வாராழிவளைத்திடு மகமேருவை
யேடாக மருப்பொரு கரமேகொடு
மாபாரதமுற்றெழுதியகாரண வடிவோனே
மால்யானை முகத்தவுணனையே யெதிர்
போராடி யுயிர்ப் பலிகொளுநாயக
மாதேவர் துதிக்கையின் மலர்வாய் மறை புரிகோவே
நாராயண னுக்கொருமருகா வுயர்
காரோணர் வரத்தினில்வருபாலக
நால்வாய்மதமுக்கண துடைமீதொரு மயிலோனே
நாவாய்குண பற்பலபொருணீடிய
மேகாடவி சுற்றிய திருநாகையி
னுகாபரணக் கணபதியே கட வுளர்வாழ்வே.

உ. தானனதான தனத்தனத்தன
தானனதான தனத்தனத்தன
தானனதான தனத்தனத்தன—தனதான.

மட்டாருமூவிரு பங்கயமாகிய
சட்கோணமீதிலிருந்த சொரூபமு
வற்றுறதமூவிரு சந்திரர்கூடிய முகமாறும்
மற்றேருள்களாறிரு செம்பொனின்மேருவு
நற்காதிலாறிரு செஞ்சுடரேநிறை
வைப்பாகவே வளர்குண்டலராசியு மறைநாலும்

முட்டாமலோதிய செங்கனிவா யமு
தப்பார்வையாறிரு கண்களுமே யணி
முத்தாரமார்பமு மம்புயமே நிகர் கரமீதே
முக்கோணமாகியவெம் பகை வேலுடன்
மிக்கானதோகையில் வந்தவிநோதமு
முற்கோலியேயறியும்படியேவர மருள்வாயே
அட்டாளதேச மடங்கலுமேருவு
மெட்டானமாதிரமும்பதினா லுல
கப்பாலுமேயுளவண்டருமே பணி யிருபாதா
அக்காரமேகனியின்சுவையே மது
ரப்பாகமே குளிர்சந்தனமே கும
ரப்பாகுகாகுற மங்கைமனோகர குருநாதா
கட்டாமமான கடம்பணிமார்பக
நிக்ஷேபமே சிவசந்ததியே கன
சத்தாருவேமணியொன்பதுபேர் துணை யெனும்வீரா
கற்பூரமேமறையின்பொருளேகமழ்
கஸ்தூரியேகையிலங்குசனா ருயர்
கற்றூணிலாடிய வைங்கரனார்* துணை முருகோனே.

---

௩. தனதனன தானதான
தனதனன தானதான
தனதனன தானதான—தனதான.

மாதா வனப்பிளளை
வீணா யழித்தவனை
வாணாள்சிறுத்தவனை யிடர்தீராய்

---

* இந்நிர்த்தன விநாயகர் ஸ்ரீகாயாரோகணேஸ்வர நாலயத்தூணில்தாண்டவம்புரிந்து ஆண்டிரக்ஷித்துவந்தவர். திருப்பணிவேலைநடத்துகையில் அக்கற்றூண் பிரிக்கப்பட்டகாலத்துத் தானிருந்தவிடத்தைவிட்டுப் பழனியாண்டவர் சந்நிதிப் பக்கத்தில் விளங்கும் இவ்விநாயகக்கடவுளுக்குத் தான் கற்றூணிலாடிய ஐங்கரனென்று சொல்லப்படுகிறது.

வாழ்வோ தரித்திரனை
ஊனோ பெருத்தவனை
வாயோ வசத்தியனை நிலைபெறும்
ஆதார மற்றவனை
ஆசாரம் விட்டவனை
யாபாசமுற்றவனை யறுபாநோ
டாறுறு தத்துவனை
யாகாத குத்திரனை
யாளாக நற்கருணை புரிவாயே
வேதாளமுட்ட வெழு
பாதாளமுட்ட வெழு
மேலோகமுட்ட வொரு கிரையாக
வேதாநிறுத்து படை
சூர்மாளவிட்ட கையில்
வேலாயுதப் ப்ரபுட மறைதேடும்
நாதா சிவப்பொழுகு
பாதா பொருப்பிலுறை
ஞான நடத்து மொரு மயில்வீரா
நாராயணற் கரிய
காரோணருக் கினிய
நாகாபுரிக்குளமர் முருகோனே.

ச. தானந்தனத்ததன தானந்தனத்ததன
தானந்தனத்ததன—தனதான.

ஆகச்சிறுகுடம்பை மீதிற்குடியிருந்த
வார்புட்குலமிருந்த வியல்பாகு
மாவிக்குடலிருந்த நேசத்தையுமறிந்து
மாகத்தினைவிரும்பி யலைவேனை
மாகப்புயல்பொழிந்த நீரிர் பயிர்தழைந்த
வாறிற்கருணைதந்து துயர்தீராய்

மாறிப்பிறவியென்ற வேலைப்புணைநிகர்ந்த
வாசக்கமலமென்ற வடிதாராய்
மோகக்குறமடந்தைமார்பிற் களபகொங்கை
மோதப்புளகரும்பு புயவீரா
மோனத்துடனிருந்து ஞானக்கலைவிரும்பி
மூவர்க்கருள்புரிந்த குமரேசா
நாகக்குலமெழுந்து பாயக்கதலிசம்பு
நாவற்கனிகிழிந்த ரசமோடி
நாடிப்புகழ்நிறைந்த சாலித்திரள்விளைந்த
நாகைப்பதியில்வந்த முருகோனே.

ரு. தானதனதானதான தானதனதானதான
தானதனதானதான—தனதான.

கார்முகத்தோடுசேர்ந்து போர்முகத்தோடுபாய்ந்து
காதுமட்டோடிநீண்ட விழியாலே
காமுகர்க்காசைதூண்டி யாடகக்கூலிவேண்டு
காரியத்தாலும் வாஞ்சை மிகவாகி
ஓர்சுருட்பாதியீந்து பூண்முலைக்கோடுதோய்ந்து
வேலையிற்போகம் நீந்த வனுராகம்
மேவிளைத்தோகைதோன்ற ஏறவிட்டேணிவாங்கும்
வேசையர்க்காசைபூண்டு மெலிவேனோ
சூருடற்பாதிகீன்று பாதியைத்தோகைநீண்ட
சூழ்கொடிப்பாதியாண்ட வடிவேலா
சோலைமுத்தேசுபாங்கனே மலைப்பாவையீன்ற
தூயபொற் றேருள்முன்னூன்கு பெறுசேயா
நாரணித்தேவிகாய்ந்த வேளையெப்போதும்வாய்ந்த
நான் மறைத்தேவர்காஞ்சி புரிவாசா
நாதர்சொற்பாலர் வாய்ந்த பாடலைக்கூறுசேந்த
ஞாகையெப்போதும் வாழ்ந்த முருகோனே.

௬. தனனதனதானதன
தனனதனதானதன
தனன தன தான தன—தனதான.

அடிமோனை முற்றெதுகை
தொடைபாவிகற்பமிசை
யசைசீரெழுத்துமுறை முறையோடே

யமுதான சொற்சுவையு
மதிலேபொருட்சுவையு
மழகானபத்துமுறை வெளிறுதே

வடிவாயிலக்கணமு
மிகவேபழுக்க வயி
ரமுமேயடித்தகள மெனவேதான்

மழைமாரியொப்பவெகு
தமிழ்மாரியைப்பொழியு
வரமேதரக் கருணை புரிவாயே

முடியேரகத்திறைடு
தலமாதிடத்தும்வட
மொழியாரணத் தருண கிரிநாதர்

முதுபாவினத்துமுன
தடியாருளத்துமுழு
முதலாகமத்துமுறை வணிகேசா

விடுவான்முகட்டையள
விடுகோபுரச் சிகர
முயராலயத்தி லுறை வடிவேலா

உமையாள்வயிற்றில்முழு
மணியேதமிழ்ப்புகழு
முரகாபுரிக் கதிப முருகோனே.

எ. தனன தானன தனன தானன
தனன தானன தனன தானன
தனன தானன தனன தானன—தனதான.

அருமைதந்தருள் பெருமைதந்தருள்
புலமைதந்தருள் நிலமைதந்தரு
ளழகுதந்தருள் குழவிதந்தரு ளதல்லாதே

யறிவுதந்தருள் பொறுமைதந்தரு
ளிளமைதந்தருள் வளமைதந்தரு
ளரசுதந்தருள் தவசுதந்தரு ளனுகூலா

ஒருமைதந்தருள் மகிமைதந்தரு
ளிருபுயங்களி லகில்வரைந்தவ
ருறவுதந்தரு ளுணர்வுதந்தரு ளெனவேதா

னுரைசெயுந்தொறு மினியதொண்டர்க
ளகமகிழ்ந்திட முகமலர்ந்திட
வுதவுமுன்செயல் விதரணங்களை யறியேனே

தருமசுந்தர வருணபங்கய
வதனமண்டல மிலகுகுண்டல
தருவெனுந்தொடையொடுகடம்பணி யிருதோளா

சமரபுங்கவ விசயசம்பிரம
வமரர்தன்சிறை விடுமசஞ்சல
சரவணந்திகழ் கருணையங்கட லெனும்வீரா

செருமுகந்தொறு மசுரர்தன்கிளை
மடியவென்றவ விமையவம்பிகை
சிவனிடம்பெறு கௌரிசுந்தரி தருபாலா

சிகரையம்பதி தணிகையம்பதி
மயிலையம்பதி கதிரையம்பதி
திருவிளங்கிய வுரகையம்பதி முருகோனே.

அ. தனன தன தான தன
தனன தன தானதன
தனன தன தானதன—தனதான.

கடவிற்கவிழ்த்த கலம்
விழலுக்கிறைத்த புனல்
கமரிற்கவிழ்த்துவிடு பாலாகும்

கனவிற்சுகித்த சுகம்
நதியிற்கரைத்த புளி
கவியிற்புதைத்த பொரு ளறநீடு

மடவிக்கெறித்த நில
வில்வைக்குறித்த கிளி
யழலிற்கதிர்க்கிரண மெனவேதா

னறிவைக்கழித் திருகைப்
பதரைப்புடைத்து மெலி
யவலக்கருத்தடையும் வகைகாணேன்

விடலைத்திருக்குமர
வசுரப்படைத்தலைவர்
விபுதர்க்குலத்தரென வுருமாறி

வெளியிற்புறப்படுவர்
விழியைச்சிமிட்டுகிற
விநயக்குறிப்பிதென வுணர்வாகி

யுடலைப்பிளக்க வவர்
குடலைச்சரித்தவர்க
ளுயிரைப்பறித்து வரு கதிர்வேலா

வுமைபெற்றெடுத்த சர
வணசிற்குணப் ப்ரபட
வுரகைத்தலத்தில்வரு முருகோனே.

௯. தானதனதானதான தானதனதானதன
தானதனதானதன — தனதான.

வாசமலர்சூட்டுவார்கள் வாள்விழிமைதீட்டுவார்கள்
மார்பின் முலைகாட்டுவார்க ளதனாலே
வாலிபரைவாட்டுவார்கள் வேள்கலகமூட்டுவார்கள்
வாசனைகள் கூட்டுவார்க ளணிவார்க

ளாசையிதழூட்டுவார்கள் வாளுகிரைநாட்டுவார்க
ளானகுரனீட்டுவார்க ளொருகோடி
யாகநிதியீட்டுவார்கள் பாவமிகுகூத்திமார்க
ளாசையறநீக்கியேயு னருள்தாராய்

ஈசர்குருமூர்த்திநாதா வானுலகோர்போற்றுபாதா
வேழுலகும்வாழ்த்துநீதா மயிலேறி
யேயுதவுகாக்ஷியாளா நாலுமறையேத்துசேயா
வேதமுறுமாற்றலார்க ளதிசூரர்

நாசமறவீழ்த்துவேலா மால்வரையையீர்த்தவேலா
நாகரிகம்வாய்த்தவேலா வடிவேலா
ஞானநிலைதோற்றும்வேலா தேவர்சிறைமீட்டவேலா
நாகைவருகார்த்திகேயா முருகோனே.

---

௧௦. தனத்தானதானதன
தனத்தானதானதன
தனத்தானதானதன — தனதான.

அறப்பாலைமேயுதவு
பொருட்பாலையேயுதவி
யருட்பாலிலேமனது நழையாம

லருட்பார்வைவேணுமது
சுருக்காணிபோலுமவை
யருக்காணியாகுமது தரவேணு

மறுப்பாடிலாததமி
முரைத்தாலுமோ வதனை
வளர்ப்பார்களாருமிலை யதனாலே

மடிப்பாகுதே கரும
மினித்தேவரீரைவிட
வகைக்காரராரொருவர் பாரம்நீயே

குறப்பாவையார்மனது
கயப்பாவையாமனது
குறிப்பாகநாடு குரு பரசேவற்

கொடிக்காரனேகனக
முடிக்காரனேவிபுதர்
குறிக்காரனேயசுரர் குலகாலா

கறுப்பானமால்மருக
சிவப்பானமேனியினில்
வெளுப்பானநீறுபுனை கதிர்வேலா

கழைக்காடுமேகதலி
வளைக்காடுமேமருவு
கடைக்கானல்வேலிவரு முருகோனே.

---

௧௧. தானந்தனத்ததன தானந்தனத்ததன
தானந்தனத்ததன—தனதான.

வீணனவாழ்க்கையதி லேயூறுமூத்தையது
வேணுறுநாற்றமதி லுயிர்தானே

வீசாதகாற்றுநிலை காணாதவாழ்க்கையினின்
மேவாததோற்றமவை யறியேனே

சோணாடுகாக்கவரு காவேரியாற்றினிடை
தோயாதமாக்களென வதிபாவி

சோராமல்வாய்த்தமயின் மீதேறுகாக்ஷியொடு
தோராதமோக்ஷகெதி தரவேணும்

சேணுடர்போற்றிசெய்து வாயாரவாழ்த்தநல
தேவாமுதூட்டினவன் மருகோனே
சேயா பராக்கிரம விசாகா வைவேற்குமர
தேரேறுபாற்கரனை நிகர்தேவா
நீணாகமாத்தியலை மாருததீர்த்தநதி
நீடாழிதோற்று மதி யிவைசூடி
நேராகவேற்றில்வரு காரோணமூர்த்தியிடம்
நீலாயதாக்ஷி தரு முருகோனே.

---

௧௨. தனத்ததந்தன தனதனதனதன
தனத்ததந்தன தனதனதனதன
தனத்ததந்தன தனதனதனதன—தனதான.

அரும்பசும்பொனசும்பு தசும்பொன்
வளர்ந்தெழுந்து குவிந்துநெருங்கு மு
னசும்புசெம்பொன்வடங்கொள்புனைந்தெதி ரிலையாகி
யலங்கிர்தங்கிருவம்புளகங்களு
மிருந்தகந்தசுகந்த கதம்பமு
மணிந்திணங்குசுணங்குபொருந்திய குறமானார்
குரும்பைவென்ற தனங்களழுந்திய
தடம்புயம்பனிரெண்டும்விளங்கு ம
குடம்புனைந்த சிறந்தெறிபுண்டர முகமாறுங்
குளிர்ந்தகண்பனிரெண்டும்விளங்கிய
சிலம்புதண்டை சதங்கையுடன் குமு
குமென்றகொந்தரவிந்த பதங்களு மறவேனே
சுரும்பனந்தமெதிர்ந்து புறஞ்செல
வடந்தடர்ந்து நடந்துநெருங்குழை
தொடர்ந்துநின்று திரும்பியருங்குமிழ் மிசையோடி
துலங்குவம்புருவங்க ளெதிர்ந் தமு
துடன்பொருந்தி விடங்கள்பயின்றெதிர்
சுழன்றுருண்டுசிவந்துகுடங்கையில் னெடிதாகிக்

கரும்பெனுஞ்சிலையம்புகளைந்தையு
முனிந்தரன்கையில் வந்துகுரங்க வி
கடம்புரிந்து புரங்களடங்கவு மெரியாலே
கலங்கவென் றுலகங்கடழைந்திட
விரங்குமன்பு சுரந்துபொழிந்திடு
கருந்தடங்கண்மடந்தை தருந்திரு முருகோனே.

---

௧௫. தானந்தனத்ததன தானந்தனத்ததன
தானந்தனத்ததன—தனதான.

மாதாபிதாவினுட னுசானும்நீ துணைவர்
மாமானும் நீ பரம சிவனுகி
வாழ்வானும்நீ விபுதர்கோமானும்நீ கரிய
மாயோனும்நீ யுதவு கொடையாலே
தாதாவும்நீ மலர்விதாதாவும்நீ வினைகள்
சார்வானும்நீ யுடலி லுயிர்போலே
சார்வானும்நீமருவி யாள்வானும் நீயுனது
தாளாண்மைதானறிய வெளிதாமோ
ஆதாரபூதசதுர் வேதா விநோத கரு
ணுகாரதேவர்பர குருநாதா
வாசானுமாகமறை வாசாமகோசர நி
ராகாரகிரன்முது தமிழ்தேறு
காதாவிராலிமலை வேலா வலாரி யுப
காரா முராரிதிரு மருகோனே
காலாயுதாசமர கோலாகலாவிமல
காரோணநாதர்தரு முருகோனே.

---

௧௪. தனதனதத்தத் தானன தன
தனதனதத்தத் தானன தன
தனதனதத்தத் தானனதன—தனதான.

மாதவிடாயைத் தந்ததா லரை
மீதினிலேகுத் துண்டவாயதன்
வாசனையோ துர்க்கந்தமாகிய குழியாகி
மாபுரையோடிச் செம்புணாய் மறை
நீள்சலதாரைக் கும்பியானதை
மானடியே யொப்பென்றபாதக மொழிவேனோ

மோதிய மார்பிற் பந்துநேர் பரு
வானதையானைக் கொம்புபோலவு
மூடியபூளைக் கண்களானதை யயில்போலு
மூரலையே முத்தென்று வாயினி
லூழலையே கற்கண்டு போலவு
மோகவிடாயைக் கொண்டதீவினை யகலாதோ

நாதவிநோதப் பண்டிதா குற
மாதுதெய்வானைக் கிங்கிதா சிவ
ஞானசொரூபச் சுந்தரா மலைக் கிழவோனே
நான்மறைநீதிக் கந்தனே யுமை
யாளனுகூலக் கந்தனே யுனை
நாடியபேருக் கன்பனே யறுமுகவோனே

ஆதவன்வாயிற் றந்தமே விழ
மோதியகோபத் தெம்பிரா னடி
யார்வினைபூளைப் பஞ்சுபோல் முடுகியதேவா
யாரணிகாமத் தம்பிகாபதி
காலனையே யுத்தண்டமா யடு
வாதிபுராணத் தம்பிரானருள் முருகோனே.

௰௫. தானந்தனத்ததன தானந்தனத்ததன
தானந்தனத்ததன—தனதான.

புற்புதப் பாழுடலெடுத் தெடுத் தாவதென்
புத்தர்கைப் பேனெனவு மெலிவேனே
பொற்பெழுத்தாறுநித முச்சரிப்பார்களிரு
பொற்பதத்தூளியுடல் புனைவேனே
அற்பனைப்பாடி யவர்பக்கலிற் போயலைய
வத்தனைக்காளல வென்னிடர் தீரா
யக்கிரமக்காலனுட னுத்தரிப்பார்களவ
ரச்சமப்போதகல வருவாயே
கற்பகக்காவிபுதர் சொர்க்கம்விட் டோடவிடு
கைச்சிலைச்சூர்முடுகு கதிர்வேலா
கட்செவிப்பூணழக ரட்டதிக்காடையினர்
கைத்தலச்சூலதரர் சிவயோக
ருற்பலக்கோலவிழி யற்புதத்தேவி யமு
தொத்தகற்பூரமொழி யுமைபாக
ருச்சிதப்பீடமுறு சித்திரத்தேரில்வரு
முத்தமத் தியாகர்தரு முருகோனே.

௰௬. தனதனதத்தத் தானன தன
தனதனதத்தத் தானன தன
தனதனதத்தத் தானனதன—தனதான.

மொழிகள்சிணுங்கிப் பேசுவார் புழு
கொழுகநிரம்பப் பூசுவார் மயிர்
முடியைய யடங்கக் கோதுவார் மலர்மாலை
முருகுகொழுந்தைச் சூடுவார் மிட
றிசையை முழங்கிப்பாடுவார் பகல்
முழுது முடம்பைப் பேணுவா ரிளைஞர்கள்மீதே

விழியிணை யம்பைப் போடுவா ரிரு
முலைகள் குலுங்கக் கூடுவார் நிதி
மிகவும் விரும்பித் தேடுவார் கணி கையர்மீதே

விரகமெனும் பித்தேறியே விழு
நரகி லழுந்திப் போய்விடா வகை
விரைசெய்சதங்கைப் பாத தாமரை தரவேணும்

வழுதியுடம்பிற் கூனும் நீடிய
சுரமுமடங்கிப் போகவே பொடி
யணையுமருந்திற் றீரவே யருள் புரிபோதில்

வழுவுசமண் கெட் டோடவே
கழுவிலுடன்பட் டேறவே யவர்
மரபுநடுங்கச் சீறு தேசிக வடிவோனே

அழிவில்குரங்கைச் சேனையா யெதிர்
நிறுவி யிலங்கைப் பாவிராவண
னவனைமழுங்கச் சாடினோன் மகிழ் மருகோனே

அரியகடம்பைப் பூணுமார்பக
குருபரசெந்திற் றேவநாயக
வழக விடங்கத் தியாகனார் தரு முருகோனே.

௧எ. தானதானன தானனதனன
தானதானன தானனதனன
தானதானன தானனதனன—தனதான.

ஆதிநாள்வினை தீராதோ மிடி
தீரநாளினம் வாராதோ வறி
யாமையா மதி போகாதோ மதுரிதமாக

வாசபாடுவ தோராதோ மொழி
வாய்மைகாதினி லேறாதோ வடி
யார்கள்போ லெனை நாடாதோ திருவுளமேதோ

தீதிலாநெறி சேராதோ வொரு
காலனார்படை தோராதோ படி
சேதியானது பாராதோ வடி — வழகான

சேர்வைதானினி நேராதோ சிவ
ஞானபோதனை தாராதோ வடி
சேரவேயருள் கூராதோ செய — லறியேனே

பூதசேனைகள் கோடாகோடிகள்
தானைகாவலர் மோடாமோடிகள்
போதவே புடை சூழ்சேனாபதி — யெனும்வீரா

பூரணாகும ரேசா கேகய
வாகனாகுற மானார் மோகன
பூஷணாகுல தேவாதேவர்கள் — பெருமாளே

காதியேபுர மாறாய் நீறெழ
வீசுமூரலினாலே போர்புரி
காரணாதியர் காயாரோகணர் — தருபாலா

காமனார்படைவீடே நேர்பொழில்
மாட மாளிகை தானே சூழ்வுறு
கானல்வேலியின்வாழ்வே யோக — முருகோனே.

௧அ. தனதானதான தன
தனதானதான தன
தனதானதான தன — தனதான.

மகராஜராவர் தன
பதிராஜராவர் சிலை
மதராஜராவர் — புவிமுழுதாளு

மனுராஜராவர் கன
துரைராஜராவர் தமிழ்
வலராஜராவர்சமர் — பெறவேகார்

முகராஜராவர் மத
கரிராஜராவர் மறை
முனிராஜராவ ருரைபிசகாத

மொழிராஜராவ ரிரு
விழிராஜ பார்வையிலுன்
முதுராஜபார்வை பெறி னரிதாமோ

நகராஜனுர் மருக
புரநாசகோப திரு
நடராஜனுர் கனக சபைராஜர்

நதிராஜவேணியினர்
தவராஜனே தவள
நரராஜசியமுளரி யினராஜர்

செகராஜசாலி சுக
மகராஜராஜர் தச
ரதராஜர்நீள்கமல முனிராஜர்

தினராஜ பானுவொடு
பணிராஜர் பூசைபுரி
சிவராஜதானி வரு முருகோனே.

77392

---

௧௫. தனதனதத்தத் தனதனதத்தத்
தனதனதத்தத் தனதனதத்தத்
தனதனதத்தத் தனதனதத்தத்—தனதான.

தோற்றமைமூள யிரத்தமெலா மொரு
காத்திரமான துருத்தியிலே வரு
சூத்திரதாரி யெனப்புகுவாய் புகு மியல்பாலே

சூட்சுமமாக வசைத்திடுவாய் வெகு
மூச்சையுலாவி வரச்சொலுவாய் மிளிர்
தோற்றமுமாகி யொடுக்கமு மாகுவை யதல்லாதே

யாத்துமம் வேறு பிரித்திடுவா யதில்
வேற்றுமைபோல வொளித்திடுவாய் பிண
வாக்கையைநாற வெடுத்தெறிவா யிது   தொழிலாக

வாக்கினைகோலி நடத்திடுவாய் புழு
வேட்டுவனாடி யெடுத்ததுபோல் வினை
யாற்பிறவாதுச துட்டயவீ டினி   யருள்வாயே

எற்றினிலேறு சிவப்பெருமா ளறு
சாத்திரநாலு மறைப்பெருமாள் மழு
வேற்றிடுசூல தரப்பெருமா ளழ   குடனாடு

மேற்கயிலாய வரைப்பெருமாள் விளா
யாத்தியினீழ விடப்பெருமா ளுல
கேத்தியதேவர் துரைப்பெருமாள்   பகிரதிவீறு

கீற்றுநிலாமகு டப்பெருமாள் திரு
நீற்றொளிவீசு நுதற்பெருமாள் தமிழ்
கேட்டருள்கூரும் வகைப்பெருமாள் புர   மதனாலே

கீர்த்திகொள்மூரல் விழிப்பெருமா ளிரு
நாற்றிசையாடை யுடைப்பெருமா னுயர்
கேத்திரராஜ புரப்பெருமா ளருள்   முருகோனே.

௨௰. தனதத் தனதத் தனதத் தனதத்
தனதத் தனதத் தனதத் தனதத்
தனதத் தனதத் தனதத் தனதத்—தனதான.

பொறுமைத்திறமற் றறமற்றருளற் றுணர்வைச்
செவியிற் பறியப்புகவிட் டறிவுக்
கிடமற் றிருளிற்   புகுவேனோ

புடவிக் குடிமைக் கடிமைப் படுமைக்
கடமைக் கடிபட் டுழலத் தலையிற்
பொறியெப்படியப் படி கட்டளையிட்   டிடலாலே

பிறவிக்கடலிற் புணையைத்தலையிற்
சிலையைச்சரணிற் றலைகைக் கொளுவிப்
பிடிபட் டிடிபட் டுயரப்பணியத் தடுமாறி

பிணியிற்றளர்வுற் றிருமிப் பகர்சொற்
குழறிக் கழறித் தடியிற் றிரியப்
பலனற்றவனுக் கினிநற் கதியைத் தரவேணும்

கறுவிச்சுரசத் துருவைச் சமரிற்
கழுகுக்கிரையிட் டமரச்சுழுவைக்
கடுகிக்கொடுமைச் சிறைவிட்டிசைபெற் றிடுவோனே

கமலத்தயனைக் குடிலப்பொருளுக்
குரைசெப்பென வப்பொழுதிற் குழறக்
கடினத்தொடுகுட் டியகைத்தலவிற் பனவேளே

சிறுகட்கரடத் திரிகட் டிவளக்
கவளப்பவளத் தவளச்சிவனுக்
கொருபுத்திரனுக் கருமைத் துணைவோனே

திகழ்பொற்பழனிக் கிரியிற் றணிகைக்
கிரியிற்கதிரைப் பதியிற்பரவைத்
திரைசுற் றுரகைப் பதியிற் குமரப் பெருமாளே.

---

௨௧. தானதனதான தானதனதான
தானதனதான — தனதான.

சாணுனபண்டி தூராதகும்பி
தானேவெதும்பு பசியாலே

தாளாண்மைகுன்றி வாளாவிருந்து
தாதாவுமின்றி யலைவேனோ

வாணாளும்விண்டு போனாலுடம்பை
யாருசமென்பள் பெறுதாயு

மானாலுமிந்திர மானாலவிஞ்சை
யாகாதுசெம்பொ னடிதாராய்

தானாமென்பர் நானாவிதங்க
டானேதெரிந்து முறையோடே
சாலோகமிஞ்சி சாமீபமிஞ்சு
சாரூபமந்த மருள்வோனே
காணாதகண்ட தேபோல்மகிழ்ந்து
காலால்நடந்து மொழிதூதர்
காரோணர்தந்த பாலாசிவந்த
காயாமெய்கண்ட முருகோனே.

உஉ. தத்தனத்தன தத்தன தத்தன தத்தன
தத்தனத்தன தத்தன தத்தன தத்தன
தத்தனத்தன தத்தன தத்தன தத்தன—தனதான.

அஷ்டமத்தி லுறுஞ்சனி கேதுவும் ஐந்தினில்
வக்கரித்து வரும்புத னாதப னொன்றினில்
அத்தமித்த புகரொடுகூடினும் வெண்சுட ரிருநாலாம்

அத்தலத்தில் மருவினும் ராஜன்மகிழ்ந் தொரு
பத்திடத்தி லுறையினும் நாலினில் வெம்பணி
யச்சமுற்ற குசனொடுகூடினு மென்செய்வ ரவராலே

தொட்டசைப்ப தரிதரிதா றெனு மந்திர
முச்சரிக்கி னிடர்கெடு வேதனை வெம்பிணி
சொற்பனத்தைநிகர்படவோடி மறைந்திடு மதல்லாதே

சொர்க்கமிக்க பதவிகளோ வெதிர் வந்திடு
மப்படிக்கு னருள்பெறவேணு மெனும்படி [ர்வாய்
சொற்புகழ்ச்சி பெருதமிழ்பாட விரும்பியுன் னருள்கூ

மட்டுமொய்த்த களபமும் நீபமும் வஞ்சியு
வெட்சிமிக்க தொடையலும் வாகை கரந்தையு
மற்புயத்தி லணிகரு ணாகர சுந்தர வடிவோனே

வச்சிரக்கை மகபதியாகிய விந்திர
னிச்சைவைத்த மணமருகா குற மங்கைதன்
வட்டமிட்ட குவிமுலைபாய வழுந்திய புயவீரா
கட்டினிற்கு மதகரி சேனைகள் வெம்பரி
கொட்டமிட்டு வருமசு ரேசனை வென்றிடு
கைத்தலத்தி லமரயி லாயுதபுங்கவ குமரேசா
கற்பகத்தை யுதவிய தாதையர் சங்கரர்
நிர்த்தமிட்ட சபையினர் நாகை விளங்கிய
கட்டியப்பரமிர்த கடேசுரர் தந்தருள் முருகோனே.

உக. தானதன தானதன தானதனதானதன,
தானதன தானதன—தனதான.

முருகுவண்டாட நறை விரிகடம்பாட வறு
முகமலர்ந்தாட நகை நிலவாட
மொழிகனிந்தாட வருள் விழிசுரந்தாட மணி
முடியசைந்தாட வணி புனைதோளா
வளைதிரண்டாட விடு குழைபுரண்டாட வரை
வடமசைந்தாட வடி யிணையான
மலர்சிறந்தாட வதி லணிசிலம்பாட வொரு
மயில்விரைந்தாட வெதிர் வரவேணும்
கிரியிலங்காபுரியில் நிருதர்சண்டாளருட
சிரசுபந்தாடு மரி மருகோனே
சிவனிடம்பாதிபெறு கவுரிசந்தானகுல
திலகசங்கிராம சிவ குருநாதா
அருணசிங்காரஜெய விரு தலங்காரபொரு
மசுரர்சங்கார திற லபிராமா
மமரர்கொண்டாடவரு விமலகங்காளரெனு
மமரநந்தீசர் தரு முருகோனே.

உச. தான தானன தானன தன
தான தானன தானன தன
தான தானன தானன தன—தனதான.

பூவுடன்படும் நார்போலே நலப்
பாலுடன்படு நீர்போலே யணி
பூணுடன்படு நூல்போலே பதர் மிகுசாலி
போவுடன்படு நேர்போலே யடி
யாருடன்படு வேனோ நீயருள்
போதமும்புரி வாயோ யாதென வறியேனே
யாவியொன்றுடல் கோடி கோடி
யநேகமுண்டது தானேநீசெய்வ
தாகிலுன்கரம் நோவாதோ மல பரிபாக
மானசந்தியும் வாராதோ வினை
யோரிரண் டிணையாகாதோ வெனை
யாளவுந்திறம் போதாதோ வினி முடியாதோ
சேவலங்கொடி யானே யேரக
மாவினன்குடியானே வானுள
தேவர்தம்பெருமானே தேசிக வடிவோனே.
சேயகந்த சுவாமியான
படீர குங்குமமார்பா ஞான வி
சேட மந்திரசொரூபா யாமளை தருபாலா
நாவிலங்கையில் வேலாலே யினி
தாய்வளைந்திடு போதா தேடிய
நாவலன் றுதிபேசா வூமைய னலவோதான்
நானிலம்புகழ் சோணாடா புல
வோர்நெருங்கிய சேணாடாதிரு
நாகையம்பதி வாழ்வே மாமயில் முருகோனே.

---

௨௫. தானந்தனத்ததன தானந்தனத்ததன
தானந்தனத்ததன — தனதான.

தலைமீதிலொடுசேரு குவர்வாலரோடெனது
தலையோடு வேமளவு மகலாதே
தயவோடு சேர்வனென மிகவாணைகூறியவர்
தமைமேவியே நிதிகை வசமாக
வலைவீசியேபிறகு தலையோடு தீயிலிடும்
மதிகூர்மை வேசியர்க ளுறவாமோ
மயில்வாகனு முடிவில்விடுகோலபாச முறில்
மறைநாள நூலெனவு மருள்பாராய்
அலையாழியேழுமலர் பொழிலாதியேழுமுடி
யசலாதி யேழு மணி முகிலேழு
தலமாதியேழு முயருலகாதி யேழுநிலை
யலையாமலால்ம் நுகர் கனிவாயர்
கலைமாதுகேள்வனிகர் சதுர்வேத ராஜமுனி
கனமானபூஜை புரி யிருபாதர்
கடல்நாகைவாழவரு சிவகாமி பாகமுறு
கயிலாயநாதர் தரு முருகோனே.

---

௨௬. தனனதன தனனதன
தனனதன தனனதன
தனனதன தனனதன — தனதான.

இளவட்டமாய் வயது
லொடலொட்டையாகி விடி
லெழில்கெட்டு மேனிமுதிர் கிழமாகி
யெழுபுத்தி யோசனையு
மழுமட்டையாய் விழிக
ளெதிரிட்ட பேருருவ மறியாதே

தளர்வட்டமா யறிவு
முழுநட்டமா யுணர்வு
சலவட்டமாய் மொழிகள் — தடுமாறி
தலைநட்டுவீழ் துயிலி
னெடுபட்டு நூலிழைகள்
தலைகெட்டதாமெனவு — மலைவேனோ

களபப் படீரமணி
புளகப் படாமுலைகள்
கனமெத்தமாகியிடை — நலிவான
கடினத்தை வார்குழையி
னெடுசெப்ப வோடிவரு
கருணைப்பிரதாபவிழி — மகமாயி

நளினத் திவாணிரதி
சசிநித்த மேபரவு
நடமிட்ட பாதவடி — வுடையாளாம்
நவசித்திர ரூபமிகு
சிவசத்தி பால்மருவு
நடுவுத்தலேசர் தரு — முருகோனே.

உஎ. தானனதனன தானனதனன
தானனதனன—தனதான.

ஒருபொருளா யதி லிருவகையா யதி
லுருவமுமா யதி — லருவாகி
யுணர்வரிதா யதி லறிவுளதா யதி
லுடல்பொரு ளாவி கொ — ளுபதேசா

குருவடிவா யெனை யடிமையதா யுள
குலதெய்வ மாயறு — முகமாகி
குருபரனாகிய கருணைமனோலய
குணவநு பூதியை — யடைவேனோ

தருமதயாபர விபுதர்ஜெனுதர
சகலகுணுகர வுபகாரா
சமரபுயாசல திமாதிவாகர
சருவவியாபக குருநாதா
அருமறைவேதனு மணிமுடிமாயனு
மடிமுடிதேடிய மகதேவ
ரரகரவீசுர சிவசிவ நாகையி
லழகியனுர் தரு முருகோனே.

உஅ. தத்தனத் தனத்த தத்த
தத்தனத் தனத்த தத்த
தத்தனத் தனத்த தத்த—தனதான.

வட்டமிட் டடிக் கனத்து
வெற்பெனப் புடைத் தெதிர்த்து
மத்தகப் பொருப்பையொத்த முலைமீதே
வச்சிரப் பதக்கமிட்டு
நித்திலக் கடுக்கனிட்டு
வட்டமிட்ட சுட்டிகட்டி யழகான
கட்டில்மெத்தை யிற்படுத்து
மட்டறப் பொருட்பறித்து
கட்குடிப் பரத்தையர்கரு மயலாகிக்
கப்பலைக்கடற் கவிழ்த்த
தொத்தவற்ப னுக்குமிக்க
கட்டளைப் பிரசித்திமுத்தி தரவேணும்
கொட்டமிட்ட சத்துருக்கள்
கொக்கரித் திரத்தசத்தி
கொப்பளிக்க வெட்டியிட்ட சமர்வேலா
குக்குடக்கொடிப் பிரவுத்த
வற்புதக்குறத்தி செப்பு
கொச்சையிற் பிரியத்தைவைத்த மணவாளா

அட்டதிக் குடுத்த கர்த்தர்
தக்கனைக் கறுத்தமத்த
ரருக்கனைப் பலத்தகர்த்து மதவேளை
யக்கமிட் டெரித்த நித்தர்
வெற்பிடத் திருக்கைபெற்ற
வத்தர்சட்டை யப்பர்பெற்ற முருகோனே.

---

௨௯. தனனதனதானதன
தனனதனதானதன
தனனதனதானதன—தனதான.

ஆலக்காமா விஜய
வாகைத்தாமா வெனவு
தாரச்சோமா நிதியி லளகேசா

வாண்மைத்திரா வதிக
வாள்விற்போரார் சமரி
லாடற்சூரா வெனவு மறியாதே

ஓலைப்பாழா யெழுது
பாடற்கேளாத முன
மோடிப்போய் மூலையினில் மறைவாகும்

லோபப்பா ழானருட
பேரைப்பாடாம லவ
ரூரைப்பாடாம லரு டரவேணு

மாலைப்போதா யுலகை
மூடச்சீறாழி தனை
வானத்தேராளி மிசை விடுமாயன்

மாயப்போராக வொரு
பேடிக்காளாகி யவன்
வாசித்தேருரு மரி மருகோனே

வேலைச்சூர்மாள வினை
யாடிப்போர் வாகைபுனை
வேலப்பா தேவர்சிறை விடும் நாதா
வேரிப்பூவா லமரர்
பூசித்தாராதனைசெய்
மேலைக் காரோணர்தரு முருகோனே.

௩௰. தானதானதானதான
தானதானதானதான
தானதானதானதான—தனதான.

காலைமாலை நீரின்மூழ்கு
நானபான நேதிபூசை
காதல்கூர் தியானமோன மிசையான
காதை யோதனுமமாய்
விடாதுபேசல் கேள்வியான
காமர்கோயின் மாடுசூழ லழகான
வாலபானு கோடிகோடி
யேகராசி ரூபமோடு
மாசிலாத பீடமீது கொலுவாகி
வாழும்ராஜ தானியோக
நாகரீக பாதசேவை
மாறிலாது காணநாளு மருள்வாயே
ஆலகால பானனுர்
கபாலசூல பாணிநாக
மாறுசோம னுரின்மாலை யணிவேணி
யாதிநீதி சோதிபேதி
யாததேவர் மூவரோது
மாசிலாத பாடல்சூடு மமரேசர்

நாலுவேத நாதகீத
ராசைநாலு தூசரீசர்
நாலுதோளு நாலுவாயு முளதாதை
நாரிபாகர் காலகாலர்
நாகராஜர் பூசையான
நாகநாத னார்குமார முருகோனே.

ருக. தனதனதந்த தனதனதந்த
தனதனதந்த—தனதான.

இடிப்பார்படல்கொடு பிடிப்பாருறுபுலி
யெனப்பாயும்வித மதனாலே
யிளைத்தேனுடல்பர தவித்தேனரகர
வினித்தா னிதுபட முடியாதே
மிடிப்பாதகவிரு ளறுத்தே யிரணிய
விளக்காகிய வொளி பெறவேதான்
விருப்பாயகமகிழ் மலர்த்தாமரையெனும்
விழிப்பார்வையி னருள் புரிவாயே
கொடிக்கேநிகரிடை தனத்தாலயர்வுறு
குறக்கோகில மயில் மணவாளா
கொடிச்சேவலையுள சமர்த்தா வசுரர்கள்
குடிக்கே மறலியை நிகர்வேலா
அடிக்காயிரநிதி படிக்காசுதவியு
மருட்பாவலர்தமிழ் புனை தேசு
ரழற்போல்விரிசடை முடித்தோ ருரகையி
லகத்தீசுரர் தரு முருகோனே.

ரு௨. தானதனதான தன தானதனதான தன
தானதனதானதன—தனதான.

ஐந்தொழிலறிந்துபுரி யைங்கடவுடங்கநிலை
யஞ்சுவகை மந்திர மறியேனே

யைம்பொழுதுநின்றதிலை யைங்குரவனென்பதிலை
யைந்திணைகடந்த நிலை மகிழ்பூத
மைந்தையுமறிந்ததிலை யைந்தறிவுவந்ததிலை
யைம்புலனை வென்றதிலை யதனாலே
யைங்கணையொழிந்ததிலை யைந்துநதிகண்டதிலை
யைம்பதமுமுய்ந்திட நினருள் தாரா
யந்தரிதுரந்தரி புரந்தரிநிரந்தரி
யரம்பையர் வணங்கவரு மிருதாளி
யம்பிகைசுமங்கலி யிளம்பிடிபசுங்கொடி
யருந்தவமிகுந்த வுமை தருபாலா
சுந்தரரிரண்டுவிசை சந்துவிடுகின்ற விறை
தும்பையணி செஞ்சடிலர் முனிவோர்கள்
தொண்டர்களுமிந்திரரு மண்டருவணங்கவரு
சுந்தரவிடங்கர்தரு முருகோனே.

---

௫௬. இந்தப் பாடலுள்ள ஏடு செவ்வையாக விளங்காதிருப்பதால் இது பிரசுரிக்காது விடப்பட்டது.

---

௫௭. தனதனன தானதான
தனதனன தானதான
தனதனன தானதான—தனதான.

அடியைத்தாரா யெனது
மிடியைப்பாராய் துயர
மதனைத்தீராய் பொதிய முனிநேரா
யறிவைத்தாரா யடிய
ரருகிற்சேராய் மனதி
லருளைக்கூராய் மயிலின் மிசைவாரா
யடிமைப்பேறு யுருகு
குடிமைத்தூராய் வினையேன்
விழியிற்சேராய் விதியி னிடையூறுய்

வயதுக்கிரு யுனது
குடிலைக்கூறாய் மருவும்
வகைகயைக்கூறாய் பிறவி தனைமாறாய்

படியிற்றேவே யமரர்
குழுவிற்கோவே விரைசெய்
பதுமப்பூவேயருண கிரி நாதர்

பகர்நற்பாவே விபுத
ருலகிற்காவே யடியர்
பரிவுக்காயே முகிலி னினமான

வுடலக்காரோணர் பணி
சடிலக்காரோண ரரு
ளுதிக்காரோணர் வளர் கயிலாய

ருதயக்காரோணர் திரு
நடனக்காரோணர் தமி
ழுரகைக்காரோணர் தரு முருகோனே.

ரூடு. தனத்ததன தனதனத்ததன தன
தனத்ததன தன—தன தான.

மத்தளமோடொரு குத்துரலோடிகுறை
மட்டறவே யுரைசெய் வதுபோல

வக்கிரமானகுறை செப்பிடிலேதெனவும்
வக்கணைபாடு கய வர்கள்மீதே

உத்தமமானதமி ழெத்தனைபாடினலெ
னுட்டயவா யருமை யறியார்க

ளொப்புரவாகமன தற்புதமாகவினி
யுச்சிதமாக வரு டரவேணும்

முத்தையனே புலவ ருக்கரசேமதுர
முத்தமிழே சுவையின் மிகுதேனே

முப்பழமே யமிர்த சர்க்கரையே கனக
முப்புரிநூ லணியுமணி மார்பா
வித்தகனார் விமலர் முக்கணனார் தவள
வெற்பானா ரரகையினில் வாசர்
மிக்கமகேசரொரு கைத்திரிசூலரொனு
விச்சுவநாதர் தரு முருகோனே.

ருசு. தத்ததன தத்ததன
தத்ததன தத்ததன
தத்ததன தத்ததன—தனதான.

இருகையே கூப்ப விழி
யிணைகளே நோக்க வுன
திசைகளே கேட்க விரு செவிவாயுன்
ஞியல்பு பாராட்டு தமி
ழதனையே வாழ்த்த மகி
ழிதயமே தீர்க்க முட னினைவாக
வருமையா நீற்றை நுத
லிலகவே சாத்தி யபி
னறுமுகா போற்றி யென முடிதாழ
வழகுசேர் கார்த்திகையின்
விரதமே நோற்க மயி
லதனிலே காட்சி தர வரவேணும்
விருதுபாராட் டசுரர்
மடியவேநீட் டல்கை
மிசையதோற் றசைக ணிணமூளை
மிடறுதான் வீக்கமுற
வதனையே சாப்பிடவு
மிகவுமே யேப்பமிடு வடிவேலா
மருவுசே ணாட்டிலுறை
சிறையெலா மீட்டுவிடு
வணிகர்சேர் நாட்டில்வரு குமரேசா

மதுராமீ னாக்ஷி யுமை
கவுரிகாமாக்ஷி யென
வருவிசா லாக்ஷிதரு முருகோனே.

---

௬௭. தானதனதந்த தானதனதந்த
தானதனதந்த—தனதான.

வேரிமலர்சூட்டி வாள்விழியைத்தீட்டி
வீணையிசை கூட்டி யிசைபாடி
வேள்விருதுநாட்டி நூலிடையைவாட்டி
மேருமுலை காட்டி விழியாலே
மாரனெடுபோட்டி யாகமலர்மூட்டி
வாலிபரை வாட்டி யிதழ்கோதி
வாயமுதமூட்டி மேலும்நிதியீட்டம்
மாதர்வினை யாட்டில் மெலிவேனோ
மேருநிகரேற்றர் பூசுமுழுநீற்றர்
வேளைமுனி சீற்றர் மதிபாதி
மேவுமொருகீற்ற ராடுமொருகூத்தர்
வீசுதிரை யாற்றர் மகதேவர்.
நாரியுமைவாய்த்த பாகர்மதி தேய்த்த
நாதர்குட மூக்கர் தருபாலா
நாகைவரு கார்த்தி கேயபர மேட்டி
நாவலர்கள் போற்று முருகோனே.

---

௬௮. தானதத்தன தானனதானன
தானதத்தன தானனதானன
தானதத்தன தானனதானன—தனதான.

மிடியி லழுந்தப்படுமோ வனுதின
மனதுகலங்கப் படுமோ வெழுதிய
விதியிலடங்கப் படுமோ பலபல பிணியாகும்

வினையி லொடுங்கப் படுமோ மருவலர்
பகையில்நடுங்கப் படுமோ கணிகையர்
விழியிலடங்கப் படுமோ கயவர்க ளிடம்நாடி
படியிலிறங்கப் படுமோ குடிமையில்
மடிமைபொருந்தப் படுமோ வயிறெரி
பசியில்வருந்தப் படுமோ முடிவினி லெமதூதர்
படையினெருங்கப் படுமோ சடலைக
ளிடையில்வெதும்பப் படுமோ நரகுறு
படியிலிறங்கப் படுமோ வினி யருள் புரிவாயே

முடியணிகங்கைப் பெருமாள்பரசுழை
துடியணிசெங்கைப் பெருமா ளழகிய
முகமலர்விந்தப்பெருமா ளரியணை தனில்மேவி
முதல்வனெனுஞ்சொற் பெருமா ளிசைபெறு
நடனபுயங்கப் பெருமாள் சதுமறை
முடுகுதுரங்கப் பெருமா ளயன்மறை யவர்தேடு
மடியிணைகஞ்சப் பெருமா ளுதவிய
கொடையின்வசந்தப் பெருமா ளிதழியை
யணியுமலங்கற் பெருமா ளுடலினி லொருபாதி
யருளுமடந்தைப் பெருமாள்மதனனை
வதைசெய்மடங்கற் பெருமாள் வலியொடு
மழகவிடங்கப் பெருமா ளுதவிய முருகோனே.

---

௩௯. தனதத்த தானதன
தனதத்த தானதன
தனதத்த தானதன—தனதான.

கடுவைப்போலே கரு
விழியைப்போலே யலை
கடலைப்போலே மத னமராடு

கணையைப்போலே யொரு
பிணையைப்போலே பிறழ்
கயலைப்போலே குயி லமர்மாவின்

வடுவைப்போலே பொரு
மயிலைப்போலே மயல்
வலையைப்போலே மது கரநீல

மலரைப்போலே யிரு
நயனத்தார்மே லதிக
மயலுக்காளாகி நித மெலிவேனு

படியிற்றேவே யுப
நிடதக்காவே வளர்
பழனிக்கோவே யசு ரமைமாறு

படையிற்சூரா வணி
களபத்தாரா வொளிர்
பவளத்தேகா திரு மயில்வீரா

வொடியத்தானே சிலை
முதுகக்கோணு ணெவி
யுதவிச்சீரே பெறு மரிதேடு

முரிமைத்தாளார் பணி
யிதழித்தோளா ரெனு
முரகைக்கா ரோணர் தரு முருகோனே.

---

௬௦. தனனதானதானன தனனதானதானன
தனனதானதானன—தன தான.

அன்பத்தாருனபுவி யெங்குப்போனாலு மினி
யண்டத்தானேது நிழ லரிதாகு
மன்பற்றார்தேடுகிற சம்பத்தாலேதுபல
னந்திப்பாழோ வடவிநி ணிழலாகு

மின்பத்தாலோபியர்கள் பிற்பற்றுதேமனதி
லென்பற்றேதா னொழிய வருள்கூர்வா
யிந்தப்பா டாரறிவர் கந்தப்பாநீ யறிவை
யென்கர்த்தாவே சரண மலர் தாராய்

பொன்கொத்தானிடிதழி மென்பொற்றேருள்மேலணி
புயங்கப்பூ ணுபரணர் சிவஞான
புஞ்சத்தார்மாதவர்கள் நெஞ்சத்தா ரமரர்தொழு
புங்கத்தார் காரணவு கயிலாயர்

வன்புற்றேலாடமுறு கண்பட்டே மாரனுடல்
மண்பட்டேபோக முனி மகதேவர்
மஞ்சைப்போலேகரிய கண்டத்தார்சூலமுள
வண்கைக்கா ரோணர் தரு முருகோனே.

சுக. தானதன தானதன
தானதன தானதன
தானதன தானதன—தனதான.

வேதநெறி கோடாமல்
மாயையிருண் மூடாமல்
வேறடிக ளூடாம லறிவீன
வேடரொடு கூடாமல்
யோகநிலை வீடாம
வீணரகி லோடாம லெமதூதர்

மோதுபடை சாடாம
லாணவமு நீடாமல்
மூடர்மிசை பாடாமல் மடவார்கள்
மோகவலை போடாம
லீலைவிளை யாடாமல்
மூதறிவு வாடாம லருள்கூர்வாய்

யாதியிம கேதாரம்
வேதகிரி மாயூர
மாடுதுறை மாகாள மயிலாடி
யாலவன மாரூர் நள்
ளாறுகட வூர்காசி
யாள்மதுரை சீர்காழி புகலூரில்
நாதருயர் வேளூரர்
சோணகிரி தேவூரர்
நாடுதிரு வாய்மூரர் கயிலாயர்
நாகைவரு காரோணர்
பாலர்மயின் மீதேறு
நாகரிகனே வாகை முருகோனே.

---

௬௨. தனத்ததனதன தனத்ததனதன
தனத்ததனதன—தனதான.

இரவியொளிதிகழ் மகுடநிரைகளு
மிலகுவதனமும் வெகுதோளு
மினியமதுரித மொழியுநுதலினி
யெழுதுதிலகமு மணிவாயு
மரையிலரவட மபயவரதமு
மலருபரிபுர மிருதாளு
மடியன்மனதினில் மருவியனுதின
மரசுபுரியவு மருள்வாயே
தருமகுணதர குமரகுருபர
சதுரஜெயதர குருநாதா
சமரவிதரண திமிரதினகர
சகலகலைவல வபிராம
வுரககணபண சிரணமணிமுடி
யுடையநடமிகு மயில்வீரா
வுததியசுரர்கள் மடியவயில்விடு
முரகை மருவிய முருகோனே.

௪௰. தனதனதனதன
தனதனதனதன
தனதனதனதன—தனதான.

மடையனை நெருடனை
மருளனை யிருளனை
மடியனை மிடியனை மடவார்மேல்
மயலனை நயவனை
வறியனை வெறியனை
மசகனை யெளியனை யறிவீன
விடையனை முகடனை
விழலனை யவலனை
விகடனை யகடனை வசைபேசும்
விரகனை வினையனை
முறடனை யகுணனை
விதனனை மலரடி மிசைசேராய்
தடகிட கிணகிட
தககிர்த கிற்திகிட
தகதக திகுதிகு திமிதோதித்
தகனக செகணக
திரிகிட திமிகிட
தணதண தணவென நடமாடு
வடகயி லயிலர
னுரகையி லமலனை
மருவியி டதுபுற மகலாத
மடமயில் நிலமகள்
கலைமகள் பரவிய
மலைமக ளுதவிய முருகோனே.

௬௪. தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன—தனதான.

மூச்சுப்போய் நாலுவிரல் போக்குப்போய் நாலுபய
மூக்கிற்போ யேறி மறுபடிமீளும்
மூச்சுப்போகாதபடி காக்கப்போகாது வெகு
மூச்சைப்போயோடி லரை வயதாகி
யாச்சுக்காணுவியது போச்சுச்சீநாறு பிண
மாட்டுக்கேகூறும் விலை யிடையாத
வாழ்க்கைப்பாழ்போதுமினி வீட்டைத்தாவீலை விளை
யாட்டைப்பாராமல் மயில் மிசைவாராய்
நீச்சுப்பாகிரதியு மாத்திப்பூமாலிகையு
நீட்டுக்கா கோதரமு மிவைசூடும்
நேர்த்திக்கோடீரர்மழு வேற்றித்தியாகேசர் திரு
நீற்றைப்பூணுபரண மகதேவர்
காய்ச்சுத்தீயானவிழி காட்டப்பூவேளை யடு
காக்ஷிச்சாரூப ருமை யொருபாகர்
காக்கைச்சேணுடர்பணி வாழ்க்கைச்சோணுடர் முது
காட்டுக்காரோணர் தரு முருகோனே.

---

௬௫. இதுவுமது.

மதித்துப்பாவாணர்வரி லொளித்துப்போவார் கயவர்
மறிச்சுப்போனு லிதென குடிகேடு
வடக்குப்போனுர்வருவ ரெனக்குத்தாயாதி யென
வழக்குப்பேசாம லிரு விழிநீரை
யுதிர்த்துத்தானேவயிறு கடுப்புப்போலே கழியு
முமக்குத்தானே சுகிர்த மினியேகென்
றுலுத்தப்பாழானர்மிசை வடித்துப்பாமாலை தனை
யுரைத்துப்பாடாம லருடரவேணு

மெதிர்த்துப்போராடசுரர் முகத்திற்சேனு பதிய
நியற்கைத்தானு பதிய திருநால்வ
ரிலக்கப்பேர்மீசைகளை முறுக்கித்தோழிகளை
யெடுத்துத்தான்வீச நில மிசைவீழ்ச்
சிதைத்துக்காலாலவரை மதித்துச்சேருமெகிற
திறத்தைப்பாரீரெனவு மகிழ்வீரா
சிரத்திற்பூணுகநதி கடுக்கைப்பூமாலை யணி
சிவப்புக்காரோணர் தரு முருகோனே.

சசு. தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன—தனதான.

அடைக்காம்பையேபருகி முலைக்காம்பையேவருடி
யணிக்காம்புமேகுழைய மலர்சூடி
மறற்கூந்தலேசரிய முகக்காந்திவேர்வொழுக
வளைக்காஞ்சியேகுலைய நகமேழா
மிடத்தூன்றியேயெழுதி மிடற்றூர்ந்தவோசைமிக
விடப்பார்ந்தள்மேல்மதனன் ரதிதேவி
யெனச்சேர்ந்துபோதமற வுடற்சாம்புமாதர்தமை
யினித்தீண்டில்நீதியல வருள்பாராய்
விடப்பாந்தளாபரண மிகப்பூண்டதோளழகர்
விளைச்சாந்தினுல்மருவு திருமேனி
வெயிற்காந்தியாருதவு தமிழ்ச்சேந்தவாதபர்கள்
விளக்கேந்தவேகொலுவி னமர்சேயா
மடற்கோங்குவாழைவழை யகிற்காம்புமாவருள
மரத்தோங்குபாதிரிம தலையாரம்
வயற்சேம்புசாலிகளு மிகச்சூழ்ந்த மேன்மையினில்
வனப்போங்குநாகைவரு முருகோனே.

---

௭௭. தந்தனந்த தந்தனந்த தந்தனந்த தந்தனந்த
தந்தனந்த தந்தனந்த—தனதான.

மந்திரங்க ளுஞ்செபங்க ளுந்தபங்க ளும்புரிந்து
வந்தனங்க ளுந்துறந்த மதிகேடன்
வஞ்சகங்க ளுஞ்சினங்க ளும்புகுந் திருந்தநெஞ்சன்
வம்புதும் புளம்புகுந்த வெறுவீணன்
சந்தனங்க ளும்புனைந்து குங்குமங்களுந் திமிர்ந்து
சம்பிரமங்க ளும்பொருந்தும் விலைமாதர்
தன்சுகங்க ளின்பமென்று மென்றுநின்ற தம்பலங்கள்
தந்திடென்று கெஞ்சுபஞ்சையெனை யாள்வாய்
யந்தரங்க மிஞ்சுகின்ற வன்புகொண் டிரங்குசிந்தை
யஞ்சுமந்தி ரங்களுஞ்சொ லடியாரி
லண்டவந்து வந்துதொண்டர்சண்டனென் றுதிங்களங்கி
யண்டரண்டர் கண்டுதெண்ட னிடும்பாதா
விந்தையம் புயன்பணிந்த நம்பர்பங் கிருந்தமங்கை
விண்டுடன் பிறந்த தங்கை யபிராமி [பைவென்ற
விஞ்சுமஞ்சொல் கொஞ்சவஞ்சி வண்டுகெண்டை யம்
மின்கருந் தடங்கண்மைந்த முருகோனே.

---

௭௮. தனனதன தானதன
தனனதன தானதன
தனனதன தானதன—தனதான.

சூலைதலை வலியீளை
நீரிழிவு துடைவாளை
சோகைபிர மியமூலம் வறள்வாயுத்
தோஷகுண மதிசாரம்
வாதசுர மதலாமை
அாிருமல் மூகவாதம் விழிநோவு

வாலகிரக வியாதி
யாசிமுய லகன்மேக
மாலைபிள வைவீடுசி யனுபோக

மாறுபடு பிணிதீர
மூலிகைகள் குடிநீரு
மாமுனது திருநீறு தரவேணு

மாலநுகர் கனிவாய
ராதிமலை கயிலாய
ராரணர் நமசிவாயர் மகதேவ

ராடல்புரி நடராயர்
மூவர்தமி ழினிநேய
ரானிநட மிடுதூயர் தருபாலா

ஞாலமகி ழபிராமி
வாலைதிரி புரையாயி
நான்மறையில் விளையாடு முமைதேவி

நாரிகவுரி கபாலி
சூலிதரு கருகூல
நாகைபுரி தனின்மேவு முருகோனே.

சகூ. தனதனன தனதான
தனதனன தனதான
தனதனன தனதான—தனதான.

மச்சிட்ட மாளிகையும்
வச்சிட்ட சூளிகையு
மட்டற்ற சாளிகையு மடியாரு

மத்திட்ட சாலிகளு
மொய்த்திட்ட பாலகரு
மட்டற்ற வோதிபெறு மனையாளு

மெச்சிட்ட வாபரண
முத்திட்ட மாலிகையும்
வித்திட்ட சாலிகளு முளதாலே
வெற்பொத்த வாழ்விதென
விச்சித்த பாவியினி
வெப்பிட்ட நீரகி லுறுவேனோ
அச்சிட்ட வேடனிடு
வுச்சிட்ட மானதசை
யத்தத்தி னுதவ வயில்வாய
ரக்கிட்ட மாலையினர்
திக்கெட்டு மாடையின
ரப்பிட்ட வேணியினர் திரிசூலர்
முச்சிட்ட நால்வர்பணி
நத்திட்ட பாணியரி
முப்பத்து மூவர்பணி யிருபாதர்
முக்கட்பு ராரிதரு
நச்சிட்ட சேடபுரி
முத்துக் குமாரரெனு முருகோனே.

௫௰. தனத்ததத்தன தானனதானன
தனத்ததத்தன தானன தானன
தனத்ததத்தன தானன தானன—தனதான.

வரைத்தனங்க ளிருச்சா ணுற்றிட
வறத்திரங்கு முகத்தார் மெத்தவு
மயக்குகின்ற நடத்தார் நித்தமு மயலாரை
வளர்த்ததன்பிளை யைப்போ லற்புத
மெனத்திரண்டபி னட்பா ளாகுமுன்
மறிச்சிநங்கை யெனப்பே ரிட்டிடு மடவார்க

ளரைப்பணங்களை விற்பார் விற்றபின்
முழுப்பணங்கள் பறிப்பார் மெத்தையி
லசப்பியங்கள் விளைப்பார் கொற்றவ ரொடுகூடு
யசத்தியங்க ளுரைப்பார் மட்டவிழ்
நிரைத்தகொண்டை முடிப்பா ரிப்படி
யடித்திரும்புமுன் முக்கா டிட்டவ ருறவாமோ

விரைக்கடம்பணி முத்தே கற்றவர்
தமிழ்க்கிரங்கிய சித்தே ரெத்தின
விளக்கெனுந்தனி வித்தே யுத்தம குணவானே
விறற்பொருந்து சமர்த்தா கர்த்தர்க
ளெனச்சிறந்திடு முத்தே வர்க்குள
விழிக்கிசைந்திட சட்கோ ணத்துறை வடிவேலா

இருக்குவந்தவள் முக்கோ ணத்துறை
யொருத்திதந்த பொருப்பே முக்கனி
யினித்தவின்ப ரசத்தா யச்சுதன் மருகோனே
யிலக்கணஞ்சொலு நற்கீரப்புல
வனுக்கிரங்கு பிரசித்தா முத்தியை
யெனக்குவந்து தரப்போ தித்திடு முருகோனே.

---

௫௧. தானதானனதத்தனதத்தன
தானதானனதத்தனதத்தன
தானதானனதத்தனதத்தன—தனதான.

பூதியமைந்தி ல்டித்தசஞ்சித
வூழ்விளைதங்கு மலக்கிடங்கனு
போகவிதங்க ளிழுத்தபம்பர முயிர்தானே
போய்வரவென்று சமைத்தபஞ்சரம்
வாயுவெழுந்த துருத்திவெம்பிணி
போர்வையிதென்று தரித்தகஞ்சுகம் விதியான

தாதவிழ்கஞ்சன் வகுத்தவொன்பது
வாசலரங்கு மிகுத்திடுஞ் சமு
சாரகும்ப வினைப்பழங்கல மெமதூதர்

தாமதமின்றி யறுத்திடும்பயி
ரீரமிருந்த விளக்கெனும்படி
தானுழல்கின்ற சமுத்திரங்கரை பிடியேனோ

வேதன்முகுந்த னெழிற்புரந்தரன்
வானவரென்ற பரப்படங்கலும்
வேளைமுனிந்து துடைத்தபின்புயர் கயிலாயம்

மேவியிறைஞ்சி யிடுக்கணுந்துறு
சூரனைவென்று தரத்தகுஞ்சிசு
வேதரவென்று வழுத்த நன்றென வுடனேதா

னாதரமிஞ்சிமறைத்திருந்த
வதோமுகமொன்றை யெடுத்துமுன்புள
வானனமைந்தில் நிறைத்திடுங்கரு ணையினாலே

யாறுமுகங்க ளெனச்சிறந்த
விலோசனம்வெம்பு மழற்பிழம்பினி
லாறுபுலிங்க மெனப்பிறந்திடு முருகோனே.

ருஉ. தந்தன தானதனந்தன தான
தந்தன தானதனந்தன தான
தந்தன தானதனந்தன தான—தனதான.

கிங்குசுணங்கு நெரிந்திடமங்கி
பரந்துபொருந்து வருந்தும்விருந்து
கலந்தநரம்பு நிணந்தசையென்புக ளொடுதோலுங்

கந்தம்வழும்பு பொதிந்தகுடம்பை
சிலந்தியெழுந்து விளைந்தகுரம்பை
கலங்குகுடும்ப விலங்குதளைந்திட மெலிவாகித்

தொங்கவிழுந்து நடந்துமுடங்கி
யிருந்துதவழ்ந்து கிடந்துநலிந்து
துவண்டுமெலங்கள் சலங்களிறங்கிட மதிகேடாத்

தொண்டைவறண் டிருகண்களிருண்டிட
வந்தகன்வந்துயிர் கொண்டிடவிங்குளர்
துஞ்சினரென்றிடு முன்பெதிர்வந்தருள் புரிவாயே

செங்கதிர்திங்கள் முகுந்தன்விரிஞ்சன்
விசும்பிறையண்டர்கள் கண்டுவெருண்டு
தியங்கிமயங்கிட வம்பிகையஞ்சின ளெனவோடச்

சிந்துவடங்க வறண்டதிணங்கி
மிகுங்கெறுவங்க ளொடுங்கவிரங்கிய
தென்றிசைவந்தகன் நின்றுகலங்கிட வுயர்வான

மங்குளகங்கை வெதும்பியுலர்ந்திட
வெண்டிசைவெங்கயம் வெம்பிநடுங்கிட
வம்பொனெடுங்கிரி யும்பலகுன்றுக டமொற

வம்பரவந்தர மம்புவியும்பில
மெங்கணும்வெந்துயர் கொண்டுமயங்கிட
வண்டமடங்கலு மண்டிவருஞ்சுடர் முருகோனே.

---

௫௩. தனதனதனதனதனதனதனதன
தனதனதனதனதனதனதனதன
தனதனதனதனதனதனதனதன—தனதான.

எழுகதி ரொளிவிடு நவமணி மகுடமு
மணிசிர முடனுத லெழுதிய தில்தமு
மிரவி யிருவரு முதயகிரி மிசையெழு மியல்பாகு

மிரணிய புயவரை தழுவிய குழையினி
லிடுமக ரிகைகளு மரனொடு பிரணவ [வாயு
மெனுமறை செவியிடை மினுமினு வெனமொழிகனி

முழுமதி புரைமலர் வதனமு மமரர்கள்
பெறவருள் கருணையும் வெகுளியு மசுரரை
முடுகுபன் னிருவிழிவனசமுமலர்கையில் வடிவேலும்
முனிவர்க ளமரர்க ளடியர்க ளனைவரு
மரகர சிவசிவ குருபர னெனவவர்
முறைமுறை பரவிய பரிபுர சரணமு மறவேனே
யழலுறு துயில்வெரு வியகட வுளர்சிவ
னடியினில் முறையிட வொருதிரு முகனரன்
மனநினை விடவறு பொறிகளு மெதி ருறவேதா
னருணதி யினில்விட விடுமென வரியய
னனிலனொ டுரைசெய வரிதென மறுமொழி
சொலவரனருள்செய வரமுடிமிசைகொடு விரை வுடனேகி
வழுவறு பகிரதி யிடைவிட வளமுறு
படியறு குழவிக ளெனு மிகவடிவுற
மகிழ்வுட னரியய னிமையவர்முலைகொடு வெனவாரல்
வனிதைய ரறுவரு முலையமு துதவிட
வணிதொடை மரநிழல் புடையிட முளரிநன்
மலரறை களி லுயர்சரவணமதில்வளர் முருகோனே.

ருசு. தானதத்தத் தானன தானன
தானதத்தத் தானன தானன
தானதத்தத் தானன தானன—தனதான.

வாதபித் தத்தின்குண மிதுவென
நாடிபற்றிப் பண்டிதர் சிலபல
வாகடக் கற்பங்களி லுளவகை சிலகூறி
மாதமட் டுந்தின்றிடு மெனவடி
சூரணத்தைத்தந்திட வதிலொரு
வாசியற்றுக் கண்டிதமுறு பிணி மிகவாகித்

தாதுவற்றுக்கண்களு மொளிகெட
நாவறட்சிக் கென்செய்வ மேவு
தாகமுற்றுத் தந்தமு நழுவுற வுறவோர்கள்
தாரமற்றப் பெண்டுக ளொடுமழ
வாவிவிட்டுப் பொன்றிடுபொழு தெதிர்
தாவுபச்சைச் சுந்தரமயில் மிசை வருவாயே
யாதிமுக்கட் சங்கர ருமையடி
நூபுரத்திற் சிந்தியமணி யொளி
யாகும் ரெத்னப் பெண்களை வருகென வுடனேதா
னுசைவைத்துச் சந்ததி தனையுள
சூதகட்டைக் கண்டுமை தடைசெய
வாயிலக்கப் பந்தியர் வெயர்வையில் வரவேதா
னேதுகர்ப்பச் சஞ்சல மரனொடு
கூறவெற்பிற் புங்கவர் மலைமக
ளோடுசெப்பப் பின்பவள் தடைவிட மலர்வாவி
யோரிடத்திற் றிண்டிற லுடன்வளர்
வீரவர்க்கத் தொன்பதின் மர்களுட
னேரிலக்கத் தம்பியருடன்வரு முருகோனே.

ருரு. தானதன்தானதத்த
தானதன்தானதத்த
தானதன்தானதத்த—தனதான.

கொஞ்சுமொழிக் கேமருட்டும்
நஞ்சுவிழிக் கேமதத்த
கும்பமுலைக் கேகறுத்த முகிலோதிக்
கொண்டைமுடிக் கேதரித்த
தண்டையடிக் கேவருக்கை
தொண்டையிதழ்க் கேவிதித்த விதியூரு

மஞ்சநடைக் கேயொளித்த
வஞ்சியிடைக் கேகவிக்கு
மங்கைவளைக் கேப்டத்தை நிகரான
வந்தவிடத் தேயிருக்கும்
நெஞ்சையொளித் தேகருத்தி
லன்புனிடத் தேயிருக்க வருள்பாராய்

வஞ்சியிடப் பாலிருக்க
விஞ்சிடபத் தேறியத்தர்
வந்துமையைக் கீழிறக்கி யறுபேராம்
மைந்தர்களைத் தானிடுக்கி
வந்திடெனப் போயெடுத்து
மங்கைகரத் தால்ணைக்க வொருரூபா
மிஞ்சியபுத் தேள்மதித்த
கந்தனெனப் பேர்படைத்து
விஞ்சுமுலைப் பால்சுரக்க வருபாலை
யின்பவளத் தேயெடுத்து
வுன்பவளத் தேகொடுக்க
வெம்புபசிக் கேகுடித்த முருகோனே.

---

௫௬. தனனதன தானதான
தனனதன தானதான
தனனதன தானதான—தனதான.

மடந்தையர் விருப்பமென்றும்
பசும்பொனின் விருப்பமென்றும்
வசுந்தரை விருப்பமென்று மகலாதே
வளர்ந்திடு பெருக்கமெந்த
வுகந்தொறு மிழுக்குமிந்த
மலங்களை யடக்குகின்ற வகைகாணே

னுடந்தையி லிறப்பதென் றந்
தொடர்ந்துயிர் பிறப்பதென்று
முறங்குதல் விழிப்பதன்றி நிலைகாணே

னுடம்புயி ரசைக்கும்விந்தை
நடம்புரிசெயற்கையெந்த
னுளம்புகு வரத்தையென்று தருவாயே

படர்ந்தபுகழ் மச்சகந்தி
தருஞ்சுத னளித்தமைந்தர்
பரந்ததட மச்சமென்று வினைதீரப்

பதங்களை வழுத்தநம்பர்
குகன்றருவன் முத்தியென்று
பரங்கிரியி லுய்த்திரென்று விடைகூற

வடர்ந்துமை யிடெக்கிவந்து
தரும்பொழு தணைத்திரங்கி
யரும்பய மளித்தபெண்க ளறுவோரு

மகங்களி சிறக்கவெங்கள்
மகன்குக னெனப்பகர்ந்து
வரன்கைலை யிற்கொணர்ந்த முருகோனே.

ருள. தனனதனதானதான
தனனதனதானதான
தனனதனதானதான—தனதான.

மறையது சோதித்த மந்த்ர
முனிவர்கள் சாதித்த மந்த்ர
மகிழ்குரு போதித்த மந்த்ர மகராதி

வடிவமு லேசித்த மந்த்ர
முருவெளி சோதித்த மந்த்ர
வசிகர மேலிட்ட மந்த்ர மூலகார்மே

லறநெறி பாலிக்கு மந்த்ர
மறிவுளர் பூசிக்கு மந்த்ர
மரியயன் மோகிக்கு மந்த்ர மெளியோர்க

ளதிபவ மாறிட்ட மந்த்ர
மனுதின மோதிட்ட மந்த்ர
மறுவகை யாதிக்க மந்த்ர மருள்வாயே

யிறையவன் லோகத் திருந்து
நெடியவன் லோகத் திருந்து
மிமையவர் லோகத் திருந்து மலைவிசு

மெழுகட லோடித் தொடர்ந்து
மொருகட லாகக் கலந்து
மெழுகதி ரோனைத் தகைந்து மகமேருச்

செறிமுடி மீதிற் பொருந்து
தருவனை மாறிப் பயின்று
திசையுறு யானைக் குலங்க ளிருநாலுஞ்

செருவுறு வேடிக்கை கண்டு
முயிர்தொறு மோடித் திரிந்து
திருவிளை யாடற் புரிந்த முருகோனே.

டுஅ. தானதானதானதான
தானதானதானதான
தானதானதானதான—தனதான.

மானம் வீர மாண்மை கேள்வி
நூலினோது நீதிநேம
வாகனுதி யோகம்வேணு மதல்லாதே

மாறிலாம லோதும் வாய்மை
பேசவேணு மாசுபாடல்
வாசையீகை யோகைவேணு மதல்லாதே

தான தியான மோன ஞான
மேன்மைவாய்மை யீடுசோடு
தானிலாத வாழ்வுவேணு மதல்லாதே
தாரிபாரி காரி போ
லுதாரம்வேணு மாகமாதி
காரமான பூசைவேணு மருள்வாயே

ஞான வேத கான ஞூர
தாதியோர்கள் வேள்வியேயு
நாளின்மேவு மாதிராசி மகமேரு
நாகமீது பாயுமாக
மேகமீது பாயும்லோக
நாசமாமி தேதுபாவ மெனவேதான்

வேனிலான் விரோதி பால
னேமுனோடி வாறுகூறும்
வீரவாகு வோடுகூற வுடனேபோய்
வீறுபாசம் வீசியேயு
ளாகவெண்மை யோடுமீள
மேடமேறி யேயுலாவு முருகோனே.

ருகூ. தனத்தத் தனத்தத் தனத்தத் தனத்தத்
தனத்தத் தனத்தத் தனத்தத் தனத்தத்
தனத்தத் தனத்தத் தனத்தத் தனத்தத்—தனதான.

விடத்தைப் பழித்துச் சிவத்துக் கறுத்துச்
சுருப்புக் கடைக்கட் பரத்தைப் பெயர்க்குள்
விருப்புற் றிதழ்ப்பற் கடித்துக் குடித்து விளையாடி
வெறுக்கைப் பணத்தைப் பறிக்கக் கொடுத்து
விழற்குச் சவத்தைப் பிலத்திற் செலுத்தி
விளச்சைப் பிடித்துக் கிணற்றிற் குதித்து விழுவார்போற்

குடத்தைக் கவிழ்த்து வயிற்றைச் சரித்து
விடக்கைக் கடித்துப் புசித்துப் பருத்த
கொழுப்புற் றுடற்குட் சடத்தைப்படைத்த வதிபாவி
குளத்தைக் கலக்கிப் பருத்துக் கருத்தி
யறத்தைச் செபத்தைத் தவத்தைக் கெடுத்த
குருட்டுக் கிழட்டுப் பிணத்தைப் பரிக்க வருவாயே

வடக்கிற் பொருப்பைக் கரத்திற் பிடித்து
வளைத்துப் புரத்தைச்சிதைக்கச் சிரித்து [ளர்
மதிக்குக் கடுக்கைத்தொடைக்குக் கொடுத்த சடையா
வரைக்குட் புறப்பட் டெதிர்த்தப் புரத்தில்
வழிப்பட் டிடக்கட் புலத்திற் குறித்து [சேராத்
வரைச்சொற் பயிற்றப் பயப்பட் டுறைத்தற் றெழில்

திடப்பட் டெனக்கட் டளைப்பட் டிடச்செப்
படைப்பொற் கெனச்சொற் பிதற்றக் கனத்தச்
செகத்தைப் படைந்துச் செயற்பட் டுறுத்து மவனேநீ
திறபட் டிருக்கைத் துதிக்கத் துதிக்கு
முதற்சொற் பொருட்குத் திகைக்கப் பலத்த [னே.
சிரத்திற் புடைத்துச் சிறைக்குட் படுத்து முருகோ

சுபO. தானதனதத்த தானதனதத்த
தானதனதத்த—தனதான.

மாலென்பதைவிடுத்து நோயென்பதைவிடுத்து
மாயங்களைவிடுத்து நிலையாத
வாழ்வென்பதைவிடுத்து லோபங்களைவிடுத்து
வாதங்களைவிடுத்து மடமாதர்
கோலங்களைவிடுத்து மூடங்களைமிகுத்த
கோபங்களைவிடுத்து மொழிமாறு

கோளென்பதைவிடுத்து நாளென்பதையுரைத்த
கோதென்பதைவிடுக்க வருவாயே
ஆலம்புனைகளத்தர் பாலண்டர்களியக்க
ராகண்டலன்வசுக்கள் மணிமாலு
மாரம்புயனிடுக்க ணேதும்பொழுதிரக்க
மாய்நந்தியைவிடுத்து முடியாமல்
வேலங்கையிலெடுத்த பாலன்புடையெருத்தின்
மேவங்கணருளாக்க விசையாமல்
மேலுஞ்சினம்விளைத்த போதன்புடன்வழுத்த
வேதன்சிறைவிடுத்த முருகோனே.

சுக. தத்தாதத்தா தத்தாதத்தா
தத்தாதத்தா தத்தாதத்தா
தத்தாதத்தா தத்தாதத்தா—தததாத.

நற்பாகத்தோண் மெய்ப்பாகத்தா
னுச்சாயப்பா டத்தானத்தா
ருக்கேயொப்பா கத்தா வயிலாலே
நற்கீரத்தே வற்கேயக்கா
லுற்பாதக்கா வற்போகக்கூர்
நட்பாகப்பா வைப்போதித்தே யெனையாள்வாய்
முற்பாலத்தா முப்பாலுக்கே
யப்பாலப்பா நிட்சேபப்பால்
முற்கோவித்தா விப்பாவிக்கே யமுதான
முப்பாலத்தா னப்பால்விட்டே
முப்பாலுக்கே யப்பாலத்தான்
முட்டாமற்று பொற்பாகத்தா னருள்கூர்வாய்
மெற்பாதிக்கா சித்தாநித்தாய்
சட்கோணத்தாய் மெய்ப்பாகத்தார்
கைச்சூலத்தார் தருபாலா

மிக்காருக்கே தக்காருக்கே
யக்காரத்தாய் திக்காடச்சூர்
வித்தாரச்சூர் கட்டோடத்தான் விடும்வேலா

கற்பூரத்தி பத்தாய்முத்தே
வர்க்கோர்வித்தே முத்தேகொத்தே
கற்றூணத்தே நற்பாதத்தா னடமாடுங்

கர்த்தாவுக்கே பிற்பாலுற்றே
யெட்டாமற்று னற்பாய்முற்போ
கத்தாரிற்பேர் பெற்றுயத்தா முருகோனே.

கூ௨. தானதத்தனதானதானன
தானதத்தனதானதானன
தானதத்தனதானதானன—தனதான.

ஐங்காதத்தினி லேகினு லென
தன்பாவத்தொடு மீள்வரே புல
னைந்தாயத்துறை தீர்வதே கட னமதாகு

மங்காடிப்பத ராகினே னுட
லெண்சாணுக்கொரு சாணினல் மிக
வம்பாயப்படு சேதிதா னெனை தெரியாதோ

சங்காரிப்பது வீரமோ சன
னஞ்சாதிப்பது நேரமோ விதை
சம்பாதிப்பது பாரமோ வுன தியல்பாகுஞ்

சஞ்சாரப்பிண மானபாவியை
மன்றுடிச்சொல வேணுமோ மிகு
சந்தோடத்துட னுள்வதே கட னருள்கூர்வாய்

கங்காபுத்ரச மேளனே யுமை
மைந்தாசற்குண மேருவே யணி
கங்காளற்கொரு பாலனே சுவை தருதேனே

கண்டேசர்க் கரையே விசேட
கரும்பேமுக்கனி யேமனோகர
கந்தாமுத்தமிழ் பாடவே வர மருள்வேலா

சிங்காரக்கதிர் வேலனே சுடர்
கொண்டாடிப்புகழ் வேலனே பகை
திண்டாடப்பொரு வேலனே மயில் மிசையேறுஞ்

செஞ்சேவற்கொடி யாளனேகுற
மின்தேவப்பிடி யானை நாயக
திண்பாரிற்சிவ ராஜதானியின் முருகோனே.

சுரு. தானத்தனதத் தானத்தனதத்
தானத்தனதத்—தனதான.

வாஞ்சைக்கடலோ நீஞ்சப்படுமோ
வாழ்ந்திட்டதிலூ தியமேது

வாங்கிச்செலுமோ ருஞ்சற்கிணையாய்
மாய்ந்துற்பவமா யலைவேனோ

தேய்ஞ்சிப்படியே கூன்பட்டிதிலே
தேம்பிக்கிழமாய் வினையான

தீங்குய்த்திடுநோய் தாங்கப்படுமோ
தேன்பொற்பதமே தரவேணுங்

காஞ்சிப்பதியாய் வேண்டற்கரிதாய்
காண்டற்கரிதாய் வருவோனே

காந்தத்துருவே வேங்கைத்தருவே
காண்பொற்குறமான் மணவாளா

பாஞ்சுற்றனுமார் தாண்டக்கடலே
பாந்தட்டுயில்வான் மருகோனே

பாந்தட்பணியார் தோன்றற்குகனே
பாந்தட்புரியார் முருகோனே.

---

௬௪. தானதத்தன தானதத்தன
தானதத்தன தானதத்தன
தானதத்தன தானதத்தன—தன்தான.

ஆகமெத்தனை யோவெடுத்தது
லோகமெத்தனை யோதரித்தது
வாசையெத்தனை யோவளர்த்தது வதல்லாதே

யாயுளெத்தனை யோகழித்தது
தாரமெத்தனை யோசுகித்தது
மாயரெத்தனை யோவழைத்தது விளைவான

போகமெத்தனை யோதொலைத்தது
வாணவத்தோ டுபாயவித்தைகள்
பூமியிற்பெறு காமியத்தொழி லெனும்லீலை

போதவிப்படி யேநடத்தி
லாபமெத்தனை சேதமெத்தனை
போதுமித்தனை ஞானமுத்திரை தரவேணும்

வாகனத்துயர் தோகைபெற்றதி
வாரணக்கொடி யேபடைத்ததி
வாகரக்கரு ணாகரக்குரு பரவீர

வாகுநற்றுணை யாகுமுத்தம
மோகனக்குற மானெழிற் றெய்வ
யானைபக்கலில் வாழ்வுபெற்றிடும் வடிவேலா

நாகமெட்டையு நாகமெட்டுடன்
மோதவிட்டக மேகளித்திடு
ஞானசற்குரு தீனரக்ஷக குமரேசா

நாவலர்க்கனு கூலவித்தக
மேவலர்க்கடி யேபருப்பத
நாகபட்டண மேவுசித்திர முருகோனே.

௬௫. தனதந் தனதனன தனதந் தனதனன
தனதந் தனதனன—தனதான.

மனதும் படபடென மிடறுங் குமுகுமென
வளையுங் கலகலென வதிரோம
வரையுஞ் சிலுசிலென நகையுங் குளுகுளென
வசனங்குலுகு லென வுகிரோடு
தனமுந் தளதளென மதனன் குடியிருந்த
தலமுஞ்சலச லென வணைமீதே
தழுவுஞ் சுகமிகழ்ந்து பதபங்கயம் வணங்கு
தவமென்பதை மிகுந்து தருவாயே
பனசந் தகில்கரும்பு வகுளங் குமிழரம்பை
பனசங்க முகுசண்பை வடமாழை
பளிசங் குரவுசம்பு மகுடங் கணிகடம்பு
பணைகுங்கும நரந்த நெடுவாகை
புனகுஞ் சிகமிலந்தை குருகஞ்சணி முடங்கல்
புரசந்துளவு சிந்து வழைதாழை
புளிமுந் திரிகைவஞ்சி மரமென்ப துதிரண்ட
பொழில்தங்கு ரகைவந்த முருகோனே.

---

௬௬. தனத்த தத்தன தானன தானன
தனத்த தத்தன தானன தானன
தனத்த தத்தன தானன தானன—தனதான.

இரக்க மீகையும் வாகையு மோகையு
மடக்க மாண்மையு மேன்மையும் வீரமு
மிழுக்குறுதவை போகமு யோகமு மடியார்க
ளிணக்க ஞானமும் மோன தியானமு
வணக்கநேதி விபூதிமெய் பூசவு
மிருக்கு நான்மறை யோதிய நீதியு மொருவாய்மை

யுரைக்கும்வா யுபசார விவேகமு
மியற்கையாகிய வாகம கேள்வியு
மொழுக்கமானத பூசையு நேசமு மறிவீன

வுழுத்தர் மார்பினிலே வசிபோ லருள்
கொடைப்ரதாப விநோதமுமே யுட
னுதிக்கும்நாள்முத லாகவுமே யினி யருள்வாயே

வரைப் புயாசல மூதறிவாகர
சிவப்பிரகாச சரேச சதாசிவ
மணிப்பிரவாள சமேள சுதாகர வசுரேசன்

மகிழ்ச்சியாய்வரு கேசயவாகன
குறப்பெண்ணுதர வாகிய மோகன
வரைக்கெலாமிறை யானமனோகர குருநாதா

விரைச்சரோருகன் மாமுடி மீதினில்
மழுக்குபாணி யனேகரு ணாகர
விழிக்குண்மாமணி யேதணிகாபுரி கதிர்காமா

மிருத்தகாசியின் மாநதிபோலவு
வடக்குமாதிர மேல்முகமாய்வரு
விருத்தகாவிரி சூழ்திருநாகையின் முருகோனே.

சுஎ. தனத்தத்தா தானதன
தனத்தத்தா தானதன
தனத்தத்தா தானதன—தனதான

பிறக்கப்போகா துடல
மெடுத்துத்தா னுவதென
பிணத்தைப்போலே திரிய முடியாது

பிழைக்கப்போமா விதனி
லுழைக்கப்போமோ மறலி
பிடிக்கத்தானே வருமுன் னெளிதாக

வறத்தைத்தேடாமல் வெகு
பவத்துக்காளா வினையை
யடக்கப்போகாது தரு முபதேச
மயர்த்துப்போ காதபடி
நினைத்துத்தானே யுருக
வடித்துப்பாலே தரவு நினைவாயே

உறுக்கிப்போரா டசுர
ரெதிர்த்துத்தானே வெருவி
யொளித்துப்போவார்கள் சில ரொருகோடி
யுரத்துப்பேசார் தலையை
யறுத்துச்சூர்வீடு தொறு
முயர்த்தித்தானே யெறிய விழுபோது

மறக்கப்போகாத மனை
வியர்க்கப்போதே தெரிய
மரித்துப்பார்மேல் விழவும் விடுவேலா
மதித்துப்பாவாணர் விட
விடுத்துத்தூதே மொழியும்
வனப்புக்காரோணர் தரு முருகோனே.

சூஅ. தனத்ததனத்ததன
தனத்ததனத்ததன
தனத்ததனத்ததன—தனதான.

எட்டிப்பிடித் திடையன்
வெட்டிக் குறைத்தமர
மிற்றுக் கிடப்பதிலை யதுபோலே
யெய்த்துக் களைத்தமன
மெத்தத் தவிக்குமதி
லிச்சைப் படுத்தும்வினை தீராதோ

தெட்டிப் பறிப்பவர்கள்
சொக்குப்பொடிக் கபடர்
தெற்குப்படக் கருது குடிகேடர்
சிக்குப் பாத்தையரை
விட்டுப் பாத்தையுணர்
செப்பக் கருத்தையினி யருள்வாயே

மட்டுக்கடப்ப மலர்
செச்சைப்புயக் குமர
வட்டத்தனத்தி யெனு மபிராமி
மைக்கட்குறத்தி மிசை
மெத்தப்பிரி யத்தையுள
வச்சிரப்பதக்க மணி மணிபார்பா
செட்டித்தனத்தில் வலை
விற்றுப்பிரதிட்டை பெறு
செக்கச்சிவப் பமர குமரேசா
சிக்கல் திருத்தணிகை
முத்தித்திருக் கதிரை
சித்ரத்தலத் துரகை முருகோனே.

கூகூ. தானதத்தன தானன தன
தானதத்தன தானன தன
தானதத்தன தானன தன—தனதான.

ஆசைபோ லுரைசொல்லுவா ரவர்
மீதிலாஊண விள்ளுவார் கணை
யாழிமோதிரம் வெள்ளியோ விதுதரவேணு
மாறுநூறுள செல்வர்போ லவ
ரேதுகாரியம் நில்லடா வென
வாவலாய்நிதி கொள்ளையாடுவ ரதல்லாதே

காசிலார்களை யெள்ளுவார் தரு
வார்கள்மார்பிடைப் புல்லுவா ரவர்
காயமேலுகிர் கிள்ளுவார் கடி தடமீதே
காமநீரது வெள்ளமா யெழ
மேவுவார்வெகு கல்வி பேசுவர்
காதலேதரு கள்ளவேசிய ருறவாமோ

மாசிலாதொரு சைவ நாயக
வேதநாயக தெய்வ நாயக
மானனேர்விழி வள்ளிநாயக மயிலேறும்
வாகனாதிப செல்வ நாயக
வேலினா லமர்வெல்லு நாயக
வானுளோர் பணிகல்வி நாயக வேணியாளு

மாசில்நாயகர் தில்லை நாயகர்
காழியார்திரு முல்லைநாயக
ராலவாய்திரு நெல்லைநாயகர் புகலூர
ராதிமால்வரை வெள்ளிநாயகர்
நாகைநாயக ரெல்லிமாநட
மாடுநாயகர் பிள்ளைநாயக முருகோனே.

எ௰. தானதனதந்ததான தானதனதந்ததான
தானதனதந்ததான—தனதான.

ஆதபனெழுந்துசாய நாளதுகுறைந்துதேய
வாடலுமொடுங்கி யோய வயதாகு
மாயுளுமுடிந்துபோக வேலினைநடந்துபோக
வாவியுமகன்று போக வெமதூத
ரீதலையொழிந்தபாவி யோதலைமறந்தபாவி
யீசனைநினைந் திடாத வதிபாவி
யீனனைநெருஞ்சில்மேவு பாதையிலுருண்டுபோக
வேதளருமந்த வேளை வருவாயே

தாதவிழ்கரந்தைவாகை நீலமுமணிந்தமார்ப
தானவரைவென்ற தோகை மயில்வீரா
தாரணியளந்தபாதர் தாரணியயின்றவாயர்
தாரணிமடந்தை நேயர் மருகோனே
நாதமுறுவிந்துவாகி யாரணமறிந்திடாத
நாயகசுயம் ப்ரகாச வடிவோனே
நான்மறைபுகழ்ந்துபாடும் ராசதசவுந்தரீக
நாகையின்மெய்கண்ட வேல முருகோனே.

எக. தனனதனதானதன தனனதனதானதன
தனனதனதானதன—தனதான.

தஞ்சநீயேயிதய கஞ்சநீயே புலவர்
சங்கம்நீயே யமரர் துரைநீயே
தந்தைநீயே துணைவர் பந்துநீயே யுலக
தம்பம்நீயே யுடலி னுயிர்நீயே
கஞ்சனீயேயதிவை குந்தனீயே கரிய
கண்டனீயே யிரவி மதிநீயே
கந்தனீயேகடவு ளன்றிவேறே தடிகள்
கண்டபேரா ரொருவர் பரம்நீயே
யஞ்சிலேசாதகமு மஞ்சிலே போதகமு
மஞ்சிலேபேதகமு மறவேதா
னஞ்சிலேபாடியது மஞ்சிலேயாடி யது
மஞ்சிலேயோடி யது முளஞான
கஞ்சுகாவாயதர இஞ்சுகாருணை யடு
கண்டகா மாமுனிவர் பணி பாதா
கங்கைபாலாகௌரி தந்தசீலா மெய்
கண்டவேலா வுரகை முருகோனே.

எ௨. தனதனதந்தத் தனத்ததான
தனதனதந்தத் தனத்ததான
தனதனதந்தத் தனத்ததான—தனதான.

மதுகரமுளரி யரும்புதானோ
வடியமழகுடைய குரும்பைதானோ
மணிவடமிலகு தசும்புதானோ முடிதானோ
மதனிருகயிலுறு பந்துதானோ
மகபதிமுடியடு செண்டுதானோ
மதமுளகரியிரு கொம்புதானோ முனிவோர்க
ளெதிருறநிறுவிய கும்பமீதே
யெதிரிலையெனவரு குன்றுதானோ
வெழில்வனிதையரிரு கொங்கையாமோ வெனவோதி
யிதயமகிழமயல் கொண்டுவீணே
திரியுமெனமறலி கொண்டுபோவா
னெனவருசமய மறிந்துநீயே வரவேணு
முதுதமிழ்சொலும் நெறிதந்தகோவே
யருணகிரிதமி ழுகந்தவேளே
முனிவர்கள் பரவியசெந்திலானே வயலூரா
முழுமுதலென்னவரு கந்தவேளே
பகிரதிதிரிபுரை தந்தசேயே
மொழிசரவணபவ தம்பிரானே குருநாதா
வதயதினகரனை வென்றரூபா
வசுரரையடுதிறல் கொன்றகோபா
வுருவெனவருவென வந்தகோலா கலவேலா
வுபநிடதம்நித விளம்புவாயா
கயமகள்குறமகள் தங்கள்நேயா
வுரகையில்மருவு மெய்கண்டவேலா முருகோனே.

எரு. தானதனதந்த தானதனதந்த
தானதனதந்த—தனதான.

காயம்நிலையென்றும் யோகம்நிலையென்றுங்
காமநிலையென்று மதல்லாதே.
காசுபணமெந்த நாளுநிலையென்றுங்
கானல்புனலென்றுந் தடுமாறி

மாயையின்மயங்கி நானெனதுவென்று
மாசினிலுழன்று மெலிவேனோ
மாதவமுயன்று ஞானநெறிகண்டு
வாழும்வகையென்று தருவாயே

சேயனெனவந்த ஞானபரகந்த
தேயுள்வருமைந்த கயிலாய
தேவனருள்துங்க தேவர்வரதுங்க
தேவநரசிங்கன் மருகோனே

நாபகவிபங்க வாரணதுரங்க
நாலுமறைபங்க முனிவோர்க
ளுடோறும்வணங்கு பாதவரவிந்த
நாகையின்மெய்கண்ட முருகோனே.

எசு. தந்ததனதன தந்ததனதன
தந்ததனதன—தனதான.

அஞ்சுதருவென மஞ்சுநிகரென
வங்கர்பதியென வண்சோம
னண்டர்பசுவென விந்துகதிரென
வந்தமணியென விரவோர்கள்

தஞ்சமெனவரு கஞ்சநிதியொரு
சங்கநிதியென வறிவீனர்
தங்களருகிலி ருந்துபுகழ்வது
சங்கையினியருள் புரிவாயே

மஞ்சுகுழல்மொழி கொஞ்சுகிளியிடை
வஞ்சிபிறைநுதல் விழிதானும்
வண்டுகனியிதழ் தொண்டைபடரு
மந்தரமலையிரு தனபாரங்

கஞ்சமுகைமுடி பந்துகுலகிரி
கம்பமதகரி யிருகோடு
கந்தமிகுகுற மங்கைபுணருமெய்
கண்டகுருபர முருகோனே.

---

௭௫. தனத்ததத்தன தானன தன தனத்ததத்தன தானன தன
தனத்ததத்தன தானன தன — தனதான.

தரித்திரத்தினிலேபடு வருத்தமெத்தனையோவது
சமுத்திரத்தையுமே நிக ரெனலாமோ
தவிக்கவிப்படியேயயன் விதித்தகட்டளையோவது
தனைத்தவிர்த்திடவே வகை தெரியாதோ

மருத்தெனைப்பதமாயதி லடக்கமெத்தவுமாயெனை
வசப்படுத்தியுமே யறி வெனும்ஞான
மனத்தினுட்கொளவேயுனை நினைத்தொருப்படவேவினை
மயக்கமற்றிடவேயருள் புரிவாயே

விரித்துரைத்திடும்நூல்களை யறப்படித்தவனேதவ
மிகுத்தசற்குணனே சர வணநாதா
விளக்கினிற்சுடரோபரி மளித்தகற்பகமேகதிர்
வெளுத்தநித்திலமே புய மணிநீபா
வெரித்தமுப்புரம்நீறெழ நகைத்ததற்பரனுர்மலை
யெடுத்தவிற்கரனுர்தரு மயில்வீரா
விலக்கணக்கவிராசர்கள் துதிக்குமுத்தமிழ்மேல்மன
மிரக்கம்வைத்திடு நாகையில் முருகோனே.

---

௭௬. தானனதானனதானனதானன
தானனதானனதானனதானன
தானனதானனதானனதானன—தனதான.

மேனகையூர் வசியோரதியோ திரு
வோகலை மாமகளோ சசியோவென
வேவிலைமாதனையேசரியா மெனு மதிபாவி

வீணரைமூடரை யீனரை லோபரை
வாரிதியே நிதியே மழையேதரு
வேமணியே பசுவே மதியேயென வியலோதி

மானமும் வீரமு மாண்மையு மேன்மையு
மேகெடுவேனினி யாகெடுவே னிது
மானுடமோ வெனகாரணமோ விது விதிதானோ

வானவர்போ லெனை யாள்வதுவே கட
னவர்போலல வோமிடியே கெட
மாநிதியேதரு வாய்வருவாய் மயின் மிசையேறித்

தானவரானவ ரானைகள்வாசிகள்
தேருடன்வீழவு மோடவுமே யெதிர்
சாடிய வேலுடையாய்குறமாமகள்கூடிய மணவாளா

தாரணியோர்பணி காரணி நாரணி
யாரணி பூரணியாமளை கோமளை
சாமளைதேவி மனோன்மணி நாயகி தருபாலா

ஞானசிகாமணி யேகருணாகர
னேகுகனே பரனேகுணனே குரு
நாதவிநோதசல்லாப மனோகர குமரேசா

நான்மறையோதிய வேதியராதியர்
பூதிதபூசித ராசிதனே திரு
நாகையி லாதிபுராண சுதாகர முருகோனே.

---

௭௭. தந்ததான தந்ததான
தந்ததான தந்ததான
தந்ததான தந்ததான—தனதான.

இந்தவாடை மஞ்சள்வாடை
வந்ததேது விந்தையாகு
மென்றுபேசி யந்தவேசி யுறவாடி
யெந்தவாடை கொண்டுபோன
தந்தவாடை யிங்குவேணு
மெங்கள்ஞாயமிந்தநீதி யலவோதா

னந்தவாடை கொண்டுவா
விரண்டுமோடை கொண்டுவா
வதன்றியேது பெண்டுவீடு விலைமாத
ரண்டிடார்கள் குண்டமாகு
மென்றுவாய்மை விண்டுபேசு
மன்பிலாதமங்கை மார்க ளுறவாமோ

தந்திமாமுகன் பிரதாப
தம்பியானதுங்கனேச
தங்கைநீள்சிலம் புலாவு மிருயாதா
சங்குநேமிதண்டு வாள்வி
லுந்துபாணி யைந்துபேர்கள்
சந்துபேசுசெங்கண்மாயன் மருகோனே

கந்தனே சுகந்தனே
செயந்தனே சிலம்பனே
கடம்பனே சவுந்தரீக மயில்வீரா
கங்கைநாரி மங்கைமார்கள்
கண்கள்போலும் வந்தஞான
கஞ்சுகாமெய் கண்டவேல முருகோனே.

எஅ. தந்ததானதன தந்ததானதன
தந்ததானதன—தனதான.

கண்டுபோலேமொழி கெண்டைபோலேவிழி
மஞ்சுபோலேகுழ லிழைபோலு
வஞ்சிபோலேயிடை செண்டுபோலேமுலை
வண்டுபோலேகள மிருதோளும்

விண்டுநேரேயெனு மங்கைமார்வேசியர்
மிஞ்சுபேராசையி லுறவாடி
வெம்பினேனுனை நம்பினேனீயர
விந்தநேர்தாளிணை தருவாயே

முண்டகாவாவவனி யுண்டவாவாவரி
முந்திவா சாடியி லமுதீதை
மொண்டுவாநீபிசி தங்கொடேவாவதை
முன்புதானேபட மொழிமாறிக்

கண்டகோடாலியி ரண்டுகூறாய்விழு
கண்டநீராலிகளெனு மீனர்
கண்களேகூசிட மண்டுபோராடுமெய்
கண்டவேலாயுத முருகோனே.

எகூ. தந்ததனதான தந்ததனதான
தந்ததனதான—தனதான.

தண்டிகையிலேறுவர் வெம்பரியிலேறுவர்
தந்திமிசையேறுவ ரதல்லாதே
சம்பனருமாகுவர் மண்டலிகராகுவர்
தண்கவரிசாமரை பெறுவார்க

ளெண்டிசையுமேபுகழ் கொண்டுலகையாளுவ
ரிந்திரவைபோகமு மடைவார்க

ளெந்தவித்மாவது முன்செயவலாதிலை
யென்செயலில்லாவகை யருள்வாயே

யண்டரரசேயர விந்தநிதியேதரு
மைந்துதருவேயுன தடியார்க

ளன்பின்வசமேதமி ழின்பரசமேவிழி
யந்தமணியேவிட முறுநீல

கண்டகுருவேமகிழ் தொண்டர்திருவேவிரி
கந்தமருவேயரி மருகோனே

கங்கைமகனேமென வந்ததிருநாகைமெய்
கண்டபெருமாளெனு முருகோனே.

அ௰. தானு தனதன தந்ததானு
தானு தனதன தந்ததானு
தானு தனதன தந்ததானு—தனதான.

மானுர்கலவி விதங்களாலே
நானுவகைசெய் மருந்தினுலே
மாறுயுடல முதிர்ந்துதானே கிழமாகி

வாய்நீர்வடிய நனேந்சமார்பாய்
நோயாலறவு மெலிந்துசுளாய்
வாளாமனது கலங்கவேதா னெமதூத

ரானுர்மிகவும் வளைந்துசூழ்வார்
நாய்வாலெனவு முடங்கவேவா
வாவாவெனவுயிர் கொண்டுபோவார் மனையாளு

மாலோசனையொடு கண்களாறாய்
நீரேசொரிய விழுந்துசோர
நாளாய்மயின்மிசை வந்துதானே யருள்கூர்வாய்

சேனுபதியென வந்தவீரா
போராடசுரரா வென்றதீரா
தேவாதியர்கள் பணிந்தகோவே கந்தவேளே

சேயாபவளம் நிறைந்தவாயா
தாதாவெனுமர விந்தபாதா
சிலாமலைமகள் தந்தபாலா குமரேசா

ஞானகரர்பணி தம்பிரானே
வேதாகமமெனு மெம்பிரானே
நாலாகலைபல தந்தவேளே யபிராமா.
நாதாகருணை விளைந்ததேனே
பாலாகுறவர் மடந்தைபாகா
நாகாபுரியின்மெய் கண்டவேலா முருகோனே.

அக. தானதத் தானதான தானதத் தானதான
தானதத் தானதான—தனதான,

காதினிற் றேடுதோண்டி வார்குழற் காடுபாய்ந்து
காமுகர்க்காசை தூண்டி யழகான
கார்முகத்தோடு சேர்ந்து நாசியிற் றுவிமீண்டு
காவியைப்போலு நீண்ட விழியாலே

யீதலுக் கானமைந்தர் மீதினிற் பார்வையூன்றி
யேபொருட்சேரும் வாஞ்சை யதனாலே
யேறவிட் டேணிவாங்கும் வேசையர்க் காசைபூண்ட
வேழையிப்போது தாங்க வருவாயே

யாதபச் சோதிவாய்ந்த தேகநற்றேசை யூர்ந்த
வாதிசட் கோணமார்ந்த தலமீதே
யார்சிவப் பானசேந்த னேகுறப் பாவைகாந்த
வாரணக்கோவை தேர்ந்து மறியாத

நாதமுக் கோணமேந்து கோமளப் பாவையீன்ற
ஞானநற்றேள்முன் னன்கு பெறுசேயா
காடகத் தியாகர்தோன்ற லானமுத்தே சுபாங்க
நாகையிற்றுரு வேங்கை முருகோனே.

அ௨. தனதனதத்தத் தனதனனதன
தனதனதத்தத் தனதனனதன
தனதனதத்தத் தனதனனதன—தனதான.

இருவினையூத்தைச் சடமலவோ நரி
கழுகெரிகாக்கைக் கிடமலவோ தின
மெடுபடுசோற்றுச் சுவரலவோ நவமெனவேதா

னிடைவெளியோட்டைக் குடமலவோ விது
நரைதிரைமூப்புக் கிழமலவோ வுயி
ரிறுதியினாற்றப் பிணமலவோ விது நிலையாகக்

கருதியவாக்கைப் பரிசலவோ வெழு
வகைபெறுதோற்றத் தியல்பலவோ விது
கடுகியகூற்றுக் கிரையலவோ பிறவியதான

கனதுயர்தீர்க்கத் திருவுளமோ வல
நரகிடைசேர்க்கத் திருவுளமோ மகிழ்
கருணையையார்க்குத் தெரியுமையா வருள்புரிவாயே

வருகுருமூர்த்தித் துரையழகா நுத
லணிதிருநீற்றுப் பொடியழகா முனி
வருமடிபோற்றிப் பணியழகாதிற லபிராமா

வடிவுளவேற்கைப் படையழகா வரு
ணகிரிசொல்வாக்குத் தமிழழகா குற
மடமயில்காட்சித் திருவழகா வளர் கதிர்காமா

திரமிகுமோட்சப் பதியழகா திசை
யுலகமுமேத்திப் புகழழகா வெழு
திரைகடல்வாழ்க்கைச் சுறவழகா வுர கையில்வேளே

தினமொருசாத்துப் படியழகா வடி
யவர்வினைதீர்க்கத் தயவுடனே யுயர்
திருமுருகாற்றுப் படையுடனே வரு முருகோனே.

———

அரு. தனத்தத்தானதனன தனத்தத்தானதனன
தனத்தத்தானதனன—தனதான.

இருப்புத்தூணுமதனை நெருப்புப்போலேயெரிய
வெரித்துத்தானே தழுவ வெமதூத
ரிழுத்துப்போவார்களது சகிக்கப்போமோ பிணையு
மெடுத்துத்தானே நரகி லெறிவார்க
ளரக்குப்போலேயுருகும் விடக்குப்போலே கருகு
மவத்துக்காளாய் மிகவு மெலிவேனே
வயிர்த்துப்போகாமலுனை நினைத்துத்தானேபணிய
வடித்துப்பாலே தரவு நினைவாயே
தருப்பொற்காவேதணிகை யிடத்திற்றேவேபசிய
தடத்திற்பூவே யருண கிரிநாதர்
தமிழ்க்குத்தானேமனது களிப்புற்றோனே யசுரர்
தளத்திற்போராடு மொரு மயில்வீரா
செருப்புக்காலால் மிகவு முதைத்துத்தான்வேடனுட
லிறத்தைத்தானே யறியு முமைபாகர்
சிரித்துத்தானீடுபுர மெரித்துச்சேராரையடு
சிவப்புக்காரோணர் தரு முருகோனே.

அசு. தாந்ததந்த தனத்தன தன
தாந்ததந்த தனத்தன தன
தாந்ததந்த தனத்தன தன—தனதான.

காந்தளங்கை வளைச்சியா் முறி
பூண்டுவந்த நுளைச்சியா ரிரு
காம்பைவென்ற திறத்ததோளியர் மணியான
காஞ்சிகொண்ட தலத்திலே யொரு
மூஞ்சிகொண்டு பிழைக்கவே வெகு
காஞ்சனங்கள் பறித்தபாதக மடமானார்

வாய்ந்ததிங்கள் முகத்தினார் சிவ
னூண்புகுந்த கடைக்கணா றிறு
மாந்தகொங்கை யிடுக்கிலேவிட   லையராவி
மாந்திநின்று தவிக்கவே மிக
வேங்கிநெஞ்ச மிளைக்கவே கன
வாஞ்சைதந்து மயக்கும் வேசிய   ருறவாமோ

சேந்தகந்த குறப்பெ ணாயகி
காந்தவிந்து முகத் தயாபர
தேன்பொழிந்த கடப்பமாலிகை   யணிமார்பா
தேங்குகங்கை யளித்த பாலக
ஞாங்கர்செங்கை பிடித்த காரண
சேர்ந்தவன்பர் துதிக்கு மாரண   குமரேசா

வேந்த தந்திமுகத்தினா ரொரு
மூன்றுகண்கள் படைத்த நாயகர்
வேண்டுதொண்ட ரகக்கிருபா நிதி   துணையோனே
வேங்கையென்ற விருக்கமாயொரு
பாங்கில்நின்ற சமர்த்தனே வயல்
மேய்ந்தசங்க மொலிக்கும் நாகையில்   முருகோனே.

அரு. தனத்தத்தனதன தனத்தத்தனதன
தனத்தத்தனதன—தனதான.

எடுப்புத்தண்டிகை பிடிப்புத்தண்குடை
யெழுத்துக் கஞ்சுகம்   விரலாழி
யிழைப்புக்கண்டிகை குழைக்குக்குண்டல
மிடைக்குச் செம்பொனி   னரைஞாணும்

மடிப்புச்சங்கிலி படுக்கைக்கம்பல
மலர்க்கைக் கங்கணமுள   லோபர்

மதத்துப்பொங்கிய வலுத்தச்சண்டிகள்
மதித்துச்செந் தமிழ்   புனையார்கள்

க்கைப்பைந்தொடை முடக்குத்தண்பிறை
சயத்துக்கங்கையு மணி கேசர்
கறுத்தக்கந்தரர் சிவப்புச்சுந்தரர்
வெளுப்புக்கந்தர ருமை பாக
ரடக்கிக்கொண்டலை யெடுத்துத்தண்டலை
யமைக்கும் பஞ்சணை யெனுநாகை
யரற்குச்சங்கரர் தமக்குப்பைங்குழ
லுமைக்குச் சந்ததி முருகோனே.

அசு. தத்ததனத்தன தத்ததனத்தன
தத்ததனத்தன தத்ததனத்தன
தத்ததனத்தன தத்ததனத்தன—தனதான.

அற்பவிடைச்சியர் சொற்பமிலைச்சியர்
மைக்கண்வலைச்சியர் குத்துமுலைச்சிய
ரத்தம்வளைச்சியர் முத்துநுளைச்சிய ரிளைஞோரை
யத்தமனத்தினில் மெத்தமயக்கிகள்
தப்பியவத்தை யளித்தசமர்த்திக
ளட்சரசுத்தி வழுத்துபசப்பிகள் மிகுசூது
சற்பனைகற்றவர் நற்குணமற்றவர்
பற்கரையிட்டு மினுக்கியசித்திர
தப்பிதமெத்த வுரைத்தவசத்தியர் மதலீலை
தர்க்கமுரைப்பவர் வெட்கமுலெச்சையு
விட்டவர்மட்டற வொட்டிகுடிப்பவ
ரத்தொழிலிப்படி பெற்ற பரத்தைய ருறவாமோ
கற்பகநற்றுணை பெற்றமகத்துவ
வுத்தமசற்குண லட்சணமுத்தமிழ்
கற்றவிலட்சண வச்சுதனுக்கொரு மருகோனே
கட்டழகைப்பெறு தத்தைகுறக்கொடி
யைப்புணரற்புத மிக்கதிறப்புய
தத்துதிரைக்கட லிற்புகுசூர்சுற வெனும்வீரா

சிற்பரதற்பர வெற்பிலிருக்கை
படைத்திடுநித்திய சித்ரவிசித்திர
ருத்திரனுக்கொரு சொற்பொருளைத்தரு முபதேசா

திக்கையுடுத்தவர் பக்கமிருத்திய
வுத்தமபொற்கொடி சிற்பரைபுத்திர
செப்புமறைப்பொருள் மிக்குரகைப்பதி முருகோனே.

---

௮௭. தானதனந்தனந்தத்த தானதனந்தனந்தத்த
தானதனந்தனந்தத்த—தனதான.

ஆணவமென்றுங்கலங்கிட்ட மாயையிதென்றும் பரந்திட்ட
வாசையிதென்றும் பொருந்திட்ட செயலாலே

யாகமனந்தஞ் சிறந்திட்ட ரூபமனந்தம் பிறந்திட்ட
மாகவிறந்தும் பிறந்திட்டு மெலிவேனே

வீணிலலைந்துங் கடன்பட்டு மானமழிந்துஞ் சுகங்கெட்டு
மேனிமெலிந்துங் குடும்பத்தி லுழல்வேனே

வீரியசண்டன் புறப்பட்ட காலமறிந்தன் புடன்கிட்டி
வேல்வரிலென்றும் பதஞ்சற்று மருள்வாயே

பூணிலிலங்குகடம்பிட்டதோள்பனிரெண்டும்பெறுங்கர்த்த
பூதலமெங் கணுஞ்சுற்று மயில்வீரா

போரிரதங்குஞ் சரங்கற்கி யாளொடுமெண்டிந்தளம்பெற்ற
பூமியினின்றுங் கரங்கொட்டுஞ் சரமாரி

[ற்ற
சேனைவுஞ்சென் றதிர்ந்திட்ட சூரனைவென்றுந் திறம்பெ
சேயுறுதுன்பந் துரந்திட்ட வடிவேலா

தேவர்வணங்குஞ்செழுஞ்செட்டியேகுகநம்பன்றரும்புத்ர.
சேடபுரஞ்சந் ததம்பெற்ற முருகோனே

அஅ. தானதனதானதனதானதனதானதன
தானதன தானதன—தனதான.

போற்றியெனவேயுனது தாட்டுணைகளேமனது
பூட்டவறியே னிதென மதிகேடு
போக்குமறியேன் வரவுநோக்குமறியேன் நிலவு
பூத்ததிரு நீறிடவு மறியேனே

மாற்றமறியேனிருகை கூப்பவறியே னுலக
மார்க்கமறியே னுனது திருநாமம்
வாழ்த்தவறியேனிலவு காத்தகிளிபோலவினி
வாய்ப்பதறியாதசிறி யனை யாள்வாய்

நீற்றையணிதேவவறு கார்த்திகைகுமாரபவ
நீக்குகதிரேச தணிகையில் வாசா
நேர்த்தியெனவேபுலவர் சாற்றுதமிழ்தேர்புலவ
நீச்சுநதியார் மதலை யறுகோடு

கீற்றுமதிநீடரவு பூத்தசடையாரடியர்
கேட்கும்வர மேயுதவு சயிலாசர்
கீர்த்திதருமீசர்தரு பாக்கியவிசாகவுயர்
கேத்திரவிராஜ புர முருகோனே.

அகூ. தனதத்தாதானதன தனதத்தா தானதன
தனதத்தாதானதன—தனதான.

இடும்பைக்காளாகிமன நடுங்கப்போமோ வறுமை
யிறுங்கைப்போலே யிறுகு மதனாலே
யெறும்புக் காகாரமிலை யிரந்திட்டாலோபியர்க
ளிரும்பைப்போலே மனது கரையார்கள்

தொடர்ந்திட்டேகூடிவரு குடும்பப்பா ழானசுமை
சுமந்தப்பா போதமினி முடியாது
துரும்பைத்தூணுமெனவு விரும்பித்தானே யருள்செய்
தொலைந்திட்டேபோகும் வினை யணுகாது

கடம்பைத்தோள்மேலணியு வசந்தத்தியாகாபுல்மை
கரும்பைப்போலோது மறுகனிவாயா
கருங்கட்டேவானைகுற மடந்தைத்தேனுரிருவர்
கதம்பப்பூணாரமுலை யுழு மார்பா
குடங்கைக்கேநேரும்விழி முருந்துக்கேநேரெயிறு
குரும்பைக்கேநேரு முலை மலைராஜர்
குலம்பெற்றேவாழுமயி லிடம்பெற்றேநாளுமுயர்
குடந்தைக்காரோணர் தரு முருகோனே.

---

௯௦. தந்ததனதந்த தந்ததனதந்த
தந்ததனதந்த—தனதான

மந்திரமறிந்து மெந்திரமறிந்தும்
வந்தனமறிந்து மியல்ஙான
வண்கலையறிந்து மிங்கிதமறிந்தும்
வம்புலவுகின்ற மலர்சூடிச்
தந்திரமறிந்து முன்செயலறிந்துஞ்
சந்ததம்வணங்கும் பெரியோர்கள்
தங்களையறிந்து தொண்டுபடுகின்ற
சந்திதனையின்று தருவாயே
பந்துதனைவென்று கும்பமதைவென்று
பங்கயவரும்பி னெடுசூது
பம்பரமிகழ்ந்து தந்தியிருகொம்பு
பண்கிரிகுரும்பை யிளநீரைத்
தொந்தமெனவென்ற கொங்கைகுறமங்கை
தும்பிமடமங்கை மணவாளா
துங்கவுமைதந்த கந்தனெனவந்த
சந்தரமெய்கண்ட முருகோனே.

---

௯௧. தத்தந்ததானதந்த தத்தந்ததானதந்த
தத்தந்ததானதந்த—தனதான.

பத்தஞ்சுதாருமந்த பொற்கொண்டை யாழிதண்டை
பட்டொன்றுதாரு மென்று முலைமூடு
பைக்கொன்றுவேணுமென்றுகச்சொன்றுவேணுமென்று
பட்சங்களாக மைந்த ரொடுபேசி

முத்தம்பிவாரு மெங்க ளத்தம்பிவாரு மந்த
முச்சந்திவீடி தென்று மறியீரோ
முட்டிந்த வேளையின்று ரொக்கங்கள்தாரு மென்ற
முற்கந்தமாதர் தங்க ளுறவாமோ

வத்தங்க ளாறிரண்டு பொற்கஞ்ச மூவிரண்டு
மக்கங்களா றிரண்டு முளசேயா
வக்கங்கைசூடு நம்பர் திக்கங்கை யானைவென்ற
வத்தங்குமார வும்பர் பணிபாதா

வுத்தங்கனே சிறந்த வெற்பெங்கு மேவுகந்த
வொப்பொன்றி லாத செங்கை வடிவேலா
வுச்சங்க ளாகவந்து திக்கெங்கு மேநிறைந்த
வுத்தண்டனே மெய்கண்ட முருகோனே.

---

௯௨. தந்தாதத்தன தான னதன
தந்தாதத்தன தான னதன
தந்தாதத்தன தான னதன—தனதான.

வெங்காமப்பிணி தோன்றியே யெனை
யங்காடிப்பத ராக்குதே யிதை
மிஞ்சாமற்றணி போக்கவே பல பிணியாலும்
வெம்பாமற்றுயர் தீர்க்கவே வரு
சந்தாபத்தையு நீக்கவே யமன்
வெம்பாசத்தினை யீர்க்கவே வர மருள்வாயே

மங்காமற்றரு ப்ராக்யமா மது
கண்காணப்பெறு மோட்சமா மது
வங்காரக்கிரி மேற்குலாவிய சுடராகும்

வந்தேயிப்படி யாட்கொள்வா யிது
சம்பாதித்திடு கீர்த்தியா மிது
வண்டேவர்க்கரி தாகுமேன்மையு மிதுவாகுங்

கங்காபுத்திர கார்த்திகேய
கடம்பா சற்குரு மூர்த்தியாகிய
கந்தா பத்தர்க ளேத்தியே பணி யிருபாதா

கண்டார் நெட்டுள வாத்தியார் மிசை
பண்டே குட்டிய வேற்கையா யுல
கந்தான்முற்றிலு மோட்டியே வரு மயில்வீரா

சிங்காரத்தொடு காட்சியே தரு
துங்காவெற்பினி லாட்சியாய் வளர்
செஞ்சேவற்கொடி வாய்த்த சேவக குமரேசா

செந்தேன் மொய்த்திடு தோப்பு வாவிகள்
செஞ்சாலித்திர ளுக்கமாய் வளர்
செம்பாகத்தமிழ் பூத்த நாகையின் முருகோனே.

---

௬௩. தானதத்தத் தத்தந் தனதன
தானதத்தத் தத்தந் தனதன
தானதத்தத் தத்தந் தனதன—தனதான.

ஆரணத்தைக் கற்றுந் துதிசெய
பூரணத்தைக் கற்றும் புகழ்பெறு
வாகமத்தைக் கற்றும் பகர்முறை பல்வான

வாதரத்தைக் கற்றும் பலபல
நூன்முகத்தைக் கற்றும் பொருளறி
யாதிருக்கிற் கற்கின் றதில் வரு பலனேது

பூரணத்தைப் பற்றும் பிரணவ
மாறெழுத்தைச் செப்புங் குரவர்கள்
போதகத்தைப் பெற்றன்புட னனு தினம்நேதி
பூதியிட்டுப் புட்பந்தனை நிகர்
தாள்வழுத்திப் பட்சம்பெற வரு
பூதியத்தைச் செப்பும்பர கதி தருவாயே

வாரணத்தைக் கட்டுந் துவசவி
சாகவெட்டுத் திக்கும்புகழ் மயில்
வாகனத்திற் சுற்றும் பவனியில் வருவோனே
வாசவற்குப் பட்டந்தர வெதிர்
சூரைவெட்டிக் குத்துந் திறலினில்
வானவர்க்குத் துக்கங்கெட விடும் வடிவேலா

வேரகத்திற் றிக்கெண் பழமுதிர்
சோலைவெற்பிற் கொற்றம் பெறுகும
ரேசசெட்டிப் பட்டம்பெறு சர வணநாதா
ஈசன்முக்கட் சுத்தன் பசுபதி
நாகையிற்பட் சத்தன் சிவனெடி
ராசியத்தைச் செப்புங் குருபர முருகோனே.

கூசு. தனதத்தனதா தனதத்தனதா
தனதத்தனதா—தனதான.

வறுமைப்பிணியா லுழலப்படுமோ
வலையிற்படுமோ னெனவேதான்
மனதிற்குறையோ கடலிற்பெரிதாய்
மலையிற்பெரிதா மதனாலே
சிறுமைப்படவே தலையிற்பொறியோ
தினமிப்படியே யலைவேனே
திருவுற்றிடவே நிதியைத்தருவாய்
திகழ்பொற்பதமே தருவாயே

மறையிற்பெருமாள் வணிகப்பெருமாள்
வனசப்பெருமாள் றதியாகு
வடிவப்பெருமாள் புலமைப்பெருமாள்
மகரப்பெருமா ளெனும்வீரா

வுறியிற்றயிர்பா னுகர்பொற்றிருமா
லுசிதப்பெருமாள் மருகோனே
யுயிருக்குயிரோ யறிவுக்கறிவே
வுரகைப்பெருமாள் முருகோனே.

---

௯௫. தந்தத்தனதானதன தந்தத்தனதானதன
தந்தத்தனதானதன—தனதான.

மஞ்சட்குளியாலு மிரு கொங்கைக்குறியாலு மிகு
வண்கைத்தொடியாலு மிள நகையாலும்
வஞ்சிக்கொடியா மிடையில் வெண்பட்டதனாலு மழை
மஞ்சுக்குலமானு குழல் முடியாலு

மின்சொற்கிளிபோல்மொழிகள் கொஞ்சிக்கொள்வாரு மரு
வின்பச்சுகலீலை புரி வகையாலு
மென்றைக்குள வாலிபர்கள் தங்கப்பொருளேகவரு
மிந்தக்கள வேசியர்க ளுறவாமோ

வஞ்சொற்குமரா பழனி செந்திற்குமரா வழகி
லந்தக்குமரா வடிவம் நிகரான
வந்திக்குமரா வடியர் சிந்தைக்குமரா வயிலி
னங்கைக்குமராகுமரி யருள் பாலா

விஞ்சைக்குமரா வமரர் தஞ்சைக்குமரா வருண
விப்பக்குமரா கருணை முக மாறு
விந்தைக்குமரா வமிர்த கங்கைக்குமரா வரிய
சங்கைக்குமரா வுரகை முருகோனே.

---

௯௬. தத்தத்தனந்ததன தத்தத்தனந்ததன
தத்தத்தனந்ததன—தனதான.

உற்பத்திவந்தவகை பிற்பட்டிறந்தவகை
யுட்பட்டிருந்த வகை யறியேனீ
யொற்றிக்கையென்பதுவு மத்திக்கையென்பதுவு
மொக்கத்திரிந்த திலை யதனாலே

முற்பட்டிருந்தவினை யிக்கட்டு வந்ததிலை
முட்டிக்குனிந்த தனி லுழலாமல்
முப்பத்திரண்டறமு ரெட்சிப்பதுன்பெருமை
முத்திக்கிசைந்த படி தருவாயே

மற்பெற்றதிண்புயமு வெட்சிப்பசுந்தொடையு
மட்டுக்கதம்ப மணி திருமார்பும்
வட்டச்சதங்கையணி பத்மச்செழும்பதமு
மட்டற்ற சுந்தரமு முளதேகா

கற்பிற்சிறந்தமயில் தித்தித்திருந்தமொழி
கட்டிக்கரும்பனைய குறமாது
கைப்பற்றுதுங்கவியல் வெற்பிற்பொருந்துமுனி
கற்கத்திருந் துரகை முருகோனே.

---

௯௭. தாத்தானத்தன தாத்தனத் தன
தாத்தானத்தன தாத்தனத் தன
தாத்தானத்தன தாத்தனத் தன— தனதான.

சோற்றுசைக்குழி தூர்த்திடாவிடி
லேற்பார்மற்றவர் வாக்குமன னெரு
தோப்பாய் மெத்தவு மேத்தாடொறு மெலிவேனோ
தோற்பாடித்தனநீக்குவா யமர்
சாத்தானத்தி லேற்றுவாய் பலர்
தூற்றுமற்பதர் போக்குவா யினி யநல்லாதே

காற்றுடிக்கிணை யாக்கியே யெனை
யாட்டாமற்பர மேட்டிதான் மறு
காற்பாரிற்புக வோட்டிடா தன தருளாலே
காப்பாரிப்புவி தோற்றும் ஞானமு
யாழ்ப்பாணக்கட லோட்டமா யது
காட்டாமற்றிரி சூட்சமேதுள புகல்வாயே

மாற்றுரைக்கமு வேற்றவே திரு
நீற்றல்வெப்பையு மாற்றவே தமிழ்
வாக்கார்சொற்கய மூர்த்திமே லருள் புரிவோனே
மார்ச்சாலத்தொடு கூட்டமா யெலி
போர்க்கேயுற்றிட வேற்ற சூரனை
வாய்ப்பாகப்பொரு வேற்கையா னடு மயில்வீரா

கூற்றேயப்பத நீட்டுவோ னுயர்
காப்பாகத்திரு நீற்றையே யணி
கூத்தாடிச்சிவ னுத்தமாலைய னுமைபாகன்
கோட்டானைக் கெழில் வாய்த்த தாதைய
னேற்றனெற்றியி னேக்கிலேவரு
கோப்பாருத்தம ரேத்து நாகையில முருகோனே.

கூஅ. தனந்தத்தா தத்தா தனதன
தனந்தத்தா தத்தா தனதன
தனந்தத்தா தத்தா தனதன—தனதான.

குரும்பைக்குச் சரியா முலைச்சிய
ரிரும்புக்குச் சரியா முளத்தியர்
குடங்கைக்குச் சரியாம் விழிச்சியர் விலைமாதர்
குடம்பைக்குட் கிளிபோல் மொழிச்சியர்
நிதம்பத்தைப் பணமாக விற்பவர்
குலங்கெட்டுக் குலமா நுளைச்சிய ரறிவீனர்

மருங்கிற்பட் டுடையே தரிப்பவ
ரரம்பைக்குத் தொடையே நிகர்ப்பவர்
மணங்கட்டிக் குழலே முடிப்பவர் மதுபான
மதம்பெற்றுச் சுகமே கொடுப்பவர்
விருந்திட்டுப் பகையே விளைப்பவர்
மருந்திட்டுப் பொருளே பறிப்பவ ருறவாமோ

வரும்பத்துத் தலைராவணர்க் கொரு
சரந்தொட்டுப் புலவோரா ரெட்சைசெய்
தரங்கத்திற் குடியா யிருப்பவர் மருகோனே
யனங்கக்கொற் றனையே யெரித்தவர்
தரங்கத்திற் கறையே யுதித்திட
வடங்கத்துய்த்திடுமோ மிடற்றினர் கயிலாயர்

சிரங்கைப்பெற் றிடுமீசர் முக்கணர்
மடந்தைக்குப் புறமே யளித்தவர்
சினம்பற்றிப் புரமே கொளுத்திய நகையாளர்
சிவந்திட்டுத் துகிர்மேனி பெற்றவர்
தரும்பொற்புக் குகனே மிகுத்திடு
சிலம்புக்குத் திருநாகையிற் கிறை முருகோனே.

கூகூ. தத்தன தனதன தந்த தானா
தத்தன தனதன தந்த தானா
தத்தன தனதன தந்த தானா—தனதானா.

எத்தனை மதகரி சிங்சமாமோ
வெத்தனை யயமொரு தங்கமாமோ
வெத்தனை குவளைகள் கஞ்சமாமோ குளமேரி
யெத்தனை கழியொரு கங்கையாமோ
வெத்தனை நதியொரு சிந்துவாமோ
வெத்தனை தகரொரு தந்தியாமோ விதல்லாதே

எத்தனை யரியொரு சிம்புளாமோ
வெத்தனை தருவொரு சந்தமாமோ
வெத்தனை யழகு சுகந்தமாமோ வனமாது
வெத்தனை நகரொரு கஞ்சியாமோ
வெத்தனை துளசியோர் கொன்றையாமோ
வெத்தனை கடவுளர் கந்தனே நீ யெனலாமோ

வுத்தமி யெனவரு கங்கைசேயா
தத்தையை நிகர்கூற மங்கை நேயா
வுற்பல விழியுமை தந்தபாலா குணசீலா
வுச்சிதமுளபனி ரெண்டுதோளா
வெற்பிறை யெனுமர விந்தபாதா
வொப்பறு குருபர கந்தவேளே யனுகூலா

முத்தியை யுதவிய செந்தில்வாழ்வே
புத்தமுதனைய குறிஞ்சி யானே
முப்புர மெரியிடு தம்பிரானுர் தருபாலா
முச்சக மிசைபெற வந்த தூயா
பத்தர்கள் முனிவர்க ளண்டர்கோவே
முத்தமி ழுரைகமெய் கண்டவேல முருகோனே.

---

௧௦௦. தானதனதந்ததான தானதனதந்ததான
தானதனதந்ததான—தனதான.

மேருவையடைந்தகாக மாமெனவிரும்பினாளு
மேயுனையடைந்த வேழை யலவோயான்
வேறொருவர்தஞ்சமேது நீயலதுசொந்தமாக
வேயடிமைகொண்டிடாத நினைவேது
சூரியனைநம்புசீத தாமரையனந்தகோடி
தோறுமவனன்பு வேணு மதுபோலே
தோகையின்மகிழ்ந்துலாவுசேர்வையிரு கண்கொளாத
சோதியொளிதந்து பாத மலர்தாராய்

சீருள தலங்கள்வாழி கார்மழைபொழிந்துவாழி.
சேவலுமகிழ்ந்து வாழி மயில்வாழி
தேனுறைகடம்புவாழி வேலினெடுசெங்கைவாழி
தேசிகர்மடங்கல் வாழி மறைவாழி

வாரிதிமுழங்குநாகை யாலயமிகுந்து வாழி
மாதுகுறமங்கை வாழி கயமாது
வாழியதிதொண்டர்வாழி நாகைவரு ரெங்கன் வாழி
வாழுதிமெய்கண்ட வேல் முருகோனே.

ஸ்ரீ மெய்கண்டவேலவர் திறப்புகழ்

முற்றிற்று.

இடையில் விட்ட 33-ம் செய்யுள்.

[ஏட்டிலுள்ளபடி அச்சிட்டிருக்கிறது. அதிலுள்ள திருத்தங்களைத்தெரிந்தோர் தெரிவிக்கச்செய்யவேண்டுகிறோம்.]

௩௩. தத்தா தத்தத் தத்தத்தா
தத்தா தத்தத் தத்தத்தா
தத்தா தத்தத் தத்தத்தா—தததாத.

எட்டாக் கொட்டிப்பூப்பார
மொப்பாய்க் காகூதிக்கொத்தாற்போ
லெற்காய்த்தோற்றித்தாட்காட்டா விடிலேதா
னிற்பாற்கூத்துப்பொற்கொப்பா
யுத்தாய்ச்சாத்துப் போட்டாப்போ
லெத்தாய்க்கூட்டிற்காற்றீர்த்தே கொடுபோவான்
முட்டாப்பாட்டுச்சாக்காட்டா
லிக்கூத்தாட்டுப் பேய்க்கூத்தா
முட்கோட்பாட்டைத்தீர்க்காட்டா வினியாமோ
முற்கோற்பார்ப்பைப்போற்சேர்ப்பாய்
நறபூச்சாத்திச்சீர்ப்பாட்டால்
முக்காட்போற்றக்காப்பாற்று ரதுபாராய்
மட்டாய்க்காட்டிச்சாய்க்காட்டார்
மெய்ப்பூச்சாத்தித்தோற்போர்ப்பார்
வற்றாத்தூக்கத்தேகாத்தார் சடைமீதே
மைக்காடாத்திப்பூத்தாச்சோ
கத்தாக்காப்புத்தூட்பூச்சார்
வட்டாய்க்கொட்டைப்பொற்கூற்பா முலைபாகர்
கட்டாற்கெத்திற்பொய்ப் பொய் பொய்
மிக்காய்த்தோற்றித்தாட் சேர்ப்பார்
நச்சாப்பாட்டுச் சாய்க்காட்டார் தருபாலா
நற்சாற்கொட்டைசூர்ப்பொற்சே
டித்தெட்கூட்டத்தாற்காப்பா
னற்காரொக்கப்பொய்த்தீர்த்தாள் முருகோனே.

விஞ்ஞாபனம்.

ஸ்ரீ மெய்கண்ட மூர்த்தியை நேரிற்கண்டு தெரிசித்து அவரதருட்பிரசாதத்தைப் பெற்றுப் பாடவாரம்பித்த இவ்வழகு முத்துப்புலவர் தாம் திருவாய்மலர்ந்துள்ள நூல்களிலொன்றாகிய இத்திறப்புகழினீற்றில் "நாகைவரு ரேங்கன் வாழி" யென்று கூறியிருப்பதைப் பற்றி இப்புத்தகத்தை வாசிப்போர் அறிந்துகொள்ள வேண்டுவ தத்தியாவசியகமாதலால் அவற்றையிங்கு தெரிவிக்கலானோம். இந்நாகைமாநகரம் வெகுகாலங்கட்கு முன்னர் உலாந்தாகவர்ன்மெண்டாரால் ஆளப்பட்டு வந்தகாலத்தில், அக்கவர்ன்மெண்டில் பெரிய உத்தியோக பதவியிலமர்ந்துள்ள ஆனந்த ரேங்கப்பிள்ளை யென்பவர் இந்த ஸ்ரீ மெய்கண்ட வேலாயுதக் கடவுளின் பக்தராக விருந்ததாகவும், அக்காலத்தில் இப்போதுள்ள சம்படி பிள்ளையார் கோயிலுக்குப் பக்கத்தில் திருக்கோயில் கொண்டிருந்த இந்த ஸ்ரீ மெய்கண்ட வேலவரைத் தற்போதுள்ள விடத்தில் ஷை ஆனந்த ரெங்கப்பிள்ளையவர்களால் பிரதிஷ்டை செய்விக்கப் பெற்று வந்த அந்நாளில்இவ்வானந்த ரெங்கப்பிள்ளைஎன்பவர் ஓர் தினம் தைலஸ்நானஞ்செய்து நித்திரைபுரியுங் காலத்தில் ஸ்ரீ மெய்கண்டவேலவர்சொற்பனத்தில்பிரத்தியக்ஷராகி, நீமாத்திரம் சுகந்த தைலஸ்நாநஞ்செய்து சுகம் பெறுவதோ? வென்று தெரிவிக்க, அன்றுமுதல் சுவாமிக்கும் சுகந்த தைலாபிஷேகம் ஷை பிள்ளையவர்களால் நடத்திவரப்பட்டது. இப்படி மெய்கண்டவேலவரைக் கைகண்டதெய்வமாகப் பிரத்தியக்ஷத்திற்கண்டு வாழ்ந்து வந்த இவ்வுத்தமப் பக்தியாளரைத்தான் இந்நூலாசிரியராகிய புலவர் பெருமானும் வாழ்த்தியிருக்கின்றனர். இப்புண்ணியசீலர்களைப்போல் ஒவ்வொருவரும் மனமொழிமெய்களால் ஸ்ரீ ஷண்முகக்கடவுளைவழிபட்டு தங்கள் இஷ்ட சித்திகளைப் பெருவதோடு இவ்வருமையான நூலை ஒவ்வொருவரும்வாங்கி வாசித்து ஸ்ரீ மெய்கண்டவேலவரின் கருணைப் பிரசாதங்கொண்டு வாழ்ந்துவரத் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றோம்.

சுபம்.

77392

213
8-13